தரம் 5 - 11 வரை

எண்: 05 எழுத்து: 12

டிஸம்பர் 2011

# AHARAM
# அகரம்

Des: Sinan.

பொதுசன நூலகம்
16 DEC 2011

## திருப்புமுனையைத் திட்டமிடல்: ஹிஜ்ரத் கற்றுத்தரும் பாடம்



## இஸ்லாத்தில் மனித உரிமைகள்

## சர்வதேச அரபு மொழி தினம்
-டிஸம்பர் 18-

30/-

மாதாந்த மாணவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



எப். சிம்ரா (185)
எம். நவாஸ்-எப். இஷ்ரா



அப்துர் ரஹீம் (175)
எம். தஸ்லீம்-எப். பிர்தௌஸியா



எப். ஸிம்ரா (174)
பரீட் அஹமட்-முஷ்பிரா



எப். மினால் (159)
எம். ஜிப்ரி-முனவ்வரா



மொஹமட் இஸ்ஹாக் - 157
எம். ஸப்ரி, எப். பின்திஹா



எப். நுப்தா (157)
முஹம்மத் மகீ-எப். ஸுஹைரா



எப். ஸைனப் (156)
எம். அன்வர்-எப். பஸ்மியா



யாஸிர் அஹமட் (155)
எம். ஜெஸ்மின்-எப். பஸ்னா



மொஹமட் (155)
எம். ஸகீர்-எப். பஸீனியா



எம். றிமாஸ் (154)
எம். றிஸ்வான்-எப். பவ்மியா



எம். ஸாபித் (153)
எம். புலைல்-எப். மூஈஸா



எம். றிஸ்லி - 171
எம். றாமிஸ், எப். பஸ்மியா



அஹமட் றாஷித் (163)
எம். றிஸான்-எப். ஹலீமா



எம். றிப்தான் (162)
எம். ஜுவைம்-எப். றிஸ்வியா



எப். பஹாமா (162)
எம். அமீர் பாஹிம்- எப். நிஹாரா



ஸாரான் ஹஸன் (153)
எம். தரூக்-எப். கதீஜா

## களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 05 டிஸம்பர் 2011 எழுத்து: 12




**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)


**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
எஸ்.எம். அனீஸ்

**சந்தா விபரம்**
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*

## உள்ளே...



04



13



18

இஸ்லாமிய அரசில் மனித உரிமைகள் 22

வெல்ல முடியாததை வெல்வது எப்படி? 24

ஹிஜ்ரத் கற்றுத் தரும் பாடம் 28

சர்வதேச அரபு மொழி தினம் 31

பரீட்சை நேர முகாமைத்துவம் 33

இணையதளமும் மாணவர்களின் இலட்சியப் பயணமும் 42

குருதிச் சுற்றோட்டத்தின் முன்னோடி 44



08



41

**பாடத்திட்டம்**

வரலாறு 15 | தமிழ் 26

புலமைப் பரிசில் 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹர்ரம் புத்தாண்டில்...

**இவ்வாண்டின்** 12வது இதழில் அகரம் உங்களை சந்திக்கின்றது. முஹர்ரம் புத்தாண்டில் (ஹிஜ்ரி 1433) காலடி எடுத்து வவைக்கும் அகரத்தின் மாணவ வாசகர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவத் தோழமைகளே! ஒரு முறை எமது வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போம். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது ஆட்சிக் காலம் அது. முஸ்லிம்களுக்கான கலண்டர் ஒன்றின் தேவையை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உணர்கிறார்கள். இஸ்லாமிய ஆண்டுக் கணிப்பை எந்த நிகழ்விலிருந்து தொடங்குவது என ஆலோசிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தமது கருத்துக்களையும் அதற்கான நியாயங்களையும் முன்மொழிகிறார்கள். இறுதியாக அமீருல் முஃமினீன் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அதுதான் இறுதித் தூதரின் தஃவாப் பாதையின் திருப்புமுனையாக அமைந்த ஹிஜ்ரத் நிகழ்ந்த வருடத்தை இஸ்லாமிய கலண்டரின் முதல் ஆண்டாக தீர்மானிக்கிறார்கள்.

நபிகளாரின் ஹிஜ்ரத் ஏராளமான பாடங்களையும் படிப்பினைகளையும் எமக்குக் கற்றுத் தருகின்றது. அது கற்றுத் தரும் பாடங்களுள் பிரதானமானது ஒரு முஸ்லிம் தனது எந்தவொரு சிறிய பெரிய கருமத்தையும் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென்பதாகும்.

வாழ்க்கையின் வெற்றி திட்டமிட்டு செயற்படுவதில் தங்கியிருக்கின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத்தை எவ்வாறு திட்டமிட்டார்கள் என்பதை வரலாற்றைப் படிக்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

பயண ஏற்பாடு, பயணத்திற்கான ஒட்டகம், வழிகாட்டி, பயணப் பாதை, பயணத்தின் போது காலடித் தடங்களை அழிப்பதற்கும் உணவு கொண்டு வருவதற்குமான ஏற்பாடு, தனக்குப் பதிலாக படுக்கையில் உறங்குவதற்கு பொருத்தமான நபர் என அனைத்தையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கச்சிதமாக திட்டமிட்டதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இதுவெல்லாம் திட்டமிட்டு செயலாற்றுவதன் முக்கியத்துவத்தையும் அது நபி வழி என்பதையும்தான் எமக்கு உணர்த்துகின்றன. நாம் பாடம் படிப்பது, கடைகளுக்கு பொருட்கள் வாங்கச் செல்வது, பாடசாலை, வகுப்பறை ஒழுங்கைப் பேணுவது, ஓய்வு நேரங்களைப் பயன்படுத்துவது, தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பெறுவது என அனைத்தையும் நாம் திட்டமிட வேண்டும். சமையலறை விவகாரங்கள் முதல் பாராளுமன்ற விவகாரம் வரை திட்டமிடப்பட வேண்டும்.

திட்டமிடுவதை நாம் புறக்கணிக்கின்றபோது எமது காலம், நேரம், உழைப்பு, முயற்சி, பணம் என அனைத்தும் விரயமாகும். வெற்றி, மகிழ்ச்சி, முன்னேற்றம் என்பதை இழந்து தோல்வி, கவலை என்பவையே வாழ்வில் மிஞ்சும். புதியதொரு முஹர்ரம் புத்தாண்டில் நுழைகின்றோம். எமது வாழ்வுக்கான இலக்கை வகுத்து திட்டமிட்டு செயலாற்றுவோம்; புதுத் தெம்புடன் நடைபோடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)

# பெருமை பேராபத்து தரும்

*"நீங்கள் ஆதமுக்கு சிரம் பணியுங்கள் என்று வானவர்களுக்கு நாம் கட்டளையிட்டபோது அவர்கள் அனைவரும் பணிந்து (கௌரவித்தார்கள்) இப்லீஸைத் தவிர."* *(அல்பகரா: 34)*

அல்லாஹ்வின் கட்டளையை இப்லீஸ் மறுத்தான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு சுஜூது செய்வதை தனக்கேற்படும் அவமானமாகவும் இழிவாகவும் கருதினான். அவன் கர்வம் கொண்டான். பெருமை அவனது அறிவை மழுங்கடித்து விட்டது. பெருமையின் விளைவாக அல்லாஹ்வின் சாபத்தை இப்லீஸ் சம்பாதிக்க நேரிட்டது. அல்லாஹ்வின் விருப்பத்தை நிறைவேற்றுவது தனது அந்தஸ்திற்கு இழுக்கு என்று இப்லீஸ் எண்ணினான். ஆனால், அதைமறுத்தது தான் மறுமைவரையிலும் தூக்கியெறியப்பட்டவனாகவும் சபிக்கப்பட்டவனாகவும் மாறிவிடக் காரணமாகி விட்டது. அல்லாஹ் இப்லீஸை நோக்கி அவன் சுஜூது செய்ய மறுத்தமைக்கான காரணத்தை வினவினான்.

*"இப்லீஸே! நான் என்னுடைய கைகளால் படைத்தவருக்கு சுஜூது செய்ய உன்னைத் தடுத்தது எது? உன்னை பெருமை ஆட்கொண்டுவிட்டதா? அல்லது நீ உயர்வானவர்களில் ஒருவனாக மாறிவிட்டாயா?"* *(ஸாத்: 75)*

இப்லீஸ் இக்கேள்விகளுக்கு பதில் ஏதும் சொல்லாது மௌனம் காக்கவுமில்லை. தான் செய்தது பிழைதான் என்று ஏற்று மன்னிப்புக் கோரவுமில்லை. தனது வாதத்தை அல்லாஹ்விடம் முன்வைத்தான்.

*"நானோ அவரைவிட மேலானவன்; ஏனெனில் என்னை நீ நெருப்பினால் படைத்தாய்; ஆனால், அவரையோ நீ களிமண்ணினால் படைத்தாய்"* என இப்லீஸின் வாதம் அமைந்தது. களிமண்ணுக்கு நெருப்பு சுஜூது செய்வதா? களிமண்ணை விட நெருப்பு இழிவானதா? நெருப்பால் படைக்கப்பட்ட எனது கண்ணியம் என்னாவது? மனிதன் எப்படி மேலானவனாக மாற முடியும்? என்ற மமதை உணர்வு அல்லாஹ்வோடு அவனை தர்க்கம் புரியவும் வழிகோலியது.

கண்ணியம் என்பது படைக்கப்பட்ட பொருளால் அல்ல. அல்லாஹ்வின் விருப்பதை நிறைவேற்றுவதன் மூலம்தான் என்பதை உணர்ந்து கொள்ளத் தவறினான். அதனால் அல்லாஹ் அவனை இழிவானவனாக ஆக்கினான்.

அப்போது அல்லாஹ், "இங்கிருந்து நீ வெளியேறு! ஏனெனில் நிச்சயமாக நீ விரட்டப்பட்டவனாகி விட்டாய் இன்னும், நிச்சயமாக மறுமை நாள் வரையிலும் எனது சாபம் உன் மீது நீடித்திருக்கும்" எனக் கூறினான்.

அல்லாஹ்வின் சாபத்தை சம்பாதித்ததன் விளைவாக தான் இழிவானவனாகி விட்டேன். இந்த இழிநிலைக்குக் காரணமான மனிதனை வழிகெடுத்து விட வேண்டும் என்று இப்லீஸ் முடிவு செய்தான். அதனால் அல்லாஹ்விடம் நீண்ட நாள் வாழும் அவகாசத்தைக் கேட்டான். எதுவரை தெரியுமா? மறுமை நிகழும் வரை வாழ்வதற்கு அவன் அல்லாஹ்விடம் அவகாசம் கேட்டான். அல்லாஹ்வும் அவனுக்கு மறுமை வரை வாழ்வதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தான். அப்போது அவன் அல்லாஹ்விடம் சூளுரைத்தான்!

*"என் இறைவனே! என்னை நீ வழிகேட்டில் விட்டதனால், நான் பூமியில் (வழிகேட்டைத் தரும் அனைத்தையும்) அவர்களுக்கு கவர்ச்சிகரமானதாகத் தோன்றச் செய்து அதன் மூலம் அவர்கள் அனைவரையும் வழிகெடுத்து விடுவேன்"* *(அல்ஹிஜ்ர்: 36-39)*

*"(அதற்கு இப்லீஸ்) நீ என்னை வழிகெட்டவனாக (வெளியேற்றி) விட்டதன் காரணத்தால் (ஆதமுடைய சந்ததியினர்) உனது நேரான வழியில் செல்வதை தடுப்பதற்காக (அவ்வழியில்) உட்கார்ந்து கொள்வேன். பின் நிச்சயமாக நான் அவர்கள் முன்னும் பின்னும் அவர்களது வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் வந்து வழிகெடுத்துக் கொண்டிருப்பேன்; ஆதலால் நீ அவர்களில் பெரும்பாலானோரை (உனக்கு) நன்றி செலுத்துவோர்களாகக் காணமாட்டாய்."* *(அல்அஃராப்: 16-17)*

தூய இறையடியார்களை வழிகெடுக்க முடியாது என்பதையும் இப்லீஸ் ஏற்றுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் பூங்காவிலிருந்து

الحديث الشريف

• ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

## முஹர்ரம் மாதமும் ஆஷூரா நோன்பும்

عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

أَفْضَلُ الصِّيَامِ بَعْدَ رَمَضَانَ شَهْرُ اللهِ الْمُحَرَّمُ وَأَفْضَلُ الصَّلَاةِ بَعْدَ الفَرِيْضَةِ صَلَاةُ اللَّيْلِ (مُتَّفَقٌ عَلَيْهِ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

"ரமழான் மாதத்திற்குப் பின் சிறப்பான நோன்பு முஹர்ரம் மாதத்தின் நோன்பாகும். கடமையான தொழுகைக்குப் பின் சிறப்பான தொழுகை இரவுத் தொழுகையாகும்." (அல்புகாரி, முஸ்லிம்)

***ஒரு தடவை*** கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபித் தோழர்களிடத்தில் இஸ்லாமிய ஆண்டுக் கணிப்பீட்டை எந்த நிகழ்விலிருந்து ஆரம்பிக்கலாம் என வினா எழுப்புகின்றார்கள். அதற்கு ஸஹாபிகள் நபிகளாரின் வரலாற்றில் இடம்பெற்ற பல நிகழ்வுகளை நினைவுகூர்ந்து பதிலளித்தார்கள். ஆனால் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களோ நபியவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட நிகழ்விலிருந்து ஆரம்பிப்போம் என ஆலோசனை வழங்குகிறார்கள். அவ் ஆலோசனைப்படியே இஸ்லாமியக் கலண்டரை வரலாற்று சிறப்புமிக்க ஹிஜ்ரத் இடம்பெற்ற ஆண்டிலிருந்து ஆரம்பிக்கிறார்கள்.

இவ்வாறு தோற்றம் பெற்ற இஸ்லாமிய ஆண்டுக் கணிப்பீட்டு முறை அல்லாஹ்வின் பேரருளால் இன்றைக்கு 1432 வருடங்களைத் தாண்டி 1433ல் காலெடுத்து வைக்க இருக்கின்றது. இஸ்லாமியக் கலண்டரில் முதல் மாதம் முஹர்ரம் ஆகும். இது 'புனிதமிக்கது' என்ற பொருளைத் தருகின்றது.

புதுவருடத்தில் காலடி வைத்திருக்கும் நாம் எமது கடந்து சென்ற வருடத்தை ஒரு தடவை மீட்டிப் பார்த்து அதில் நல்ல நன்மையான பொழுதுகளைக் காணும்போது அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி பாவத்தில் கரைந்த நிமிடங்களுக்காக அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புத் தேடி அவனது அருளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இந்த ஹதீஸ் சொல்கின்ற சிறப்பான நோன்பென்பது முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோற்கப்படும் ஆஷூரா நோன்பாகும். நபியவர்களும் இந்த தினத்தில் நோன்பு நோற்றார்கள். அப்போது யூதர்களும் இத்தினத்தில் நோன்பு நோற்கும் பழக்கமுடையவர்களாக இருந்ததால் அவர்களது வழிமுறைக்கு மாற்றம் செய்யும் முகமாக "எதிர்வரும் வருடம் நான் உயிருடன் இருந்தால் முஹர்ரம் ஒன்பதாம் நாளிலும் நோன்பிருப்பேன்" எனக் கூறினார்கள். இதன் அடிப்படையில் முஹர்ரம் ஒன்பதாம் பத்தாம் தினங்களில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும்.

பொதுவாக அறபிகள் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே முஹர்ரம் மாதத்தைக் கண்ணியமிக்க மாதமாகக் கருதி வந்தனர். இந்த நோன்பு ரமழான் மாத நோன்பிற்கு அடுத்த ஸ்தானத்தைப் பெறுகின்றது என இந்த ஹதீஸ் எமக்கு கூறுகிறது. "யார் இந்த முஹர்ரம் மாத நோன்புகளை நோற்கின்றாரோ அவருடைய முந்தைய வருட பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன" என்றும் கூறப்பட்டுள்ளது.

நபியவர்கள் ஆஷூரா தினத்தன்று தானும் நோன்பு நோற்று மற்றவர்களையும் நோன்பு நோற்குமாறு ஏவினார்கள் என இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

எனவே, அன்பான மாணவர்களே! நபியவர்கள் ஆஷூரா தினத்தில் நோற்பதற்கு வழிகாட்டியிருக்கும் இந்நோன்பை நோற்று நமது குடும்பத்தினரையும் நோன்பு நோற்க ஆர்வமூட்டுவோம். இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி எமது முன்னைய வருடத்தில் செய்த சிறு பாவங்களையும் தவறுகளையும் அழித்துக் கொள்ள முயற்சிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk

# சாதுவான ஆமைகள்


## Tortoises

**ஆமைகள்** பார்ப்பதற்கு மிகவும் சாதுவான தோற்றத்தை உடையவை. இவற்றின் செயற்பாடுகள்கூட மிகவும் மெதுவாகவே இடம்பெறும். சிறிய தலையையும் சற்று நீண்ட நான்கு கால்களையும் குறுகிய வாலையும் முதுகிலே ஓடு ஒன்றையும் ஆமைகள் கொண்டுள்ளன. இவை இடை வெப்ப வலயப் பிரதேசங்களிலேயே அதிகம் வாழ்கின்றன.

இவை தமது வாழ்நாளில் அதிக காலத்தை நீரிலும் சிறிது காலத்தை நிலத்திலும் கழிக்கும் தன்மை கொண்டனவென்பதால் ஈரூடக வாழி என்றும் இவற்றை அழைக்கின்றோம். மேலும் ஊர்வன இனத்தைச் சேர்ந்த விலங்குகளின் பட்டியலிலும் இவை அடங்குகின்றன. குளம், ஆறு, ஏரி, கடல் என அனைத்து நீர்நிலைகளிலும் இவ் ஆமைகள் பரவலாக வாழ்கின்றன. ஆமைகள் சுமார் 200 மில்லியன் வருடங்களுக்கும் மேலாக பூமியில் வாழ்ந்து வருவதாக படிம ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உலகில் 300 வகையான ஆமை இனங்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவற்றில் கடலாமை, பூ ஆமை, சேற்று ஆமை, பாலாமை, நட்சத்திர ஆமை, பெருந்தலை ஆமை ஆகிய ஆறும் மிகவும் பிரசித்தமானவை. இவற்றுக்குப் பொருத்தமான வாழ்வாதாரத்தையும் வாழ்விடத்தையும் வித்தியாசமான குணவியல்புகளையும் தோற்ற அமைப்பையும் அல்லாஹ்வே கொடுத்துள்ளான். Leather Back எனப்படும் ஆமைகளே உலகில் மிகப் பெரிய ஆமைகளாகும். இவை சுமார் 1 முதல் 2.5 மீட்டர்கள் வரை வளர்கின்றன. இவை அதிகமாக பசுபிக் பெருங்கடலில்தான் வசிக்கின்றன. அதேபோன்று வட அமெரிக்காவில் உள்ள common bog எனும் 10 cm நீளமுடைய ஆமைகளே உலகில் மிகச் சிறிய ஆமைகளாகும்.

பொதுவாக ஆமைகளின் செயற்பாடுகள் மெதுவாகவே நடைபெறுகின்றன. தரையில் நடப்பதாயினும் உணவு உண்பதாயினும் அவை மெதுவாகவே தொழிற்படும். ஆமைகளின் இதயமும் மிகவும் நிதானமாகவே துடிக்கின்றன. ஆமைகள் ஒரு முறை சுவாசிக்க 4 நிமிடங்கள் எடுத்துக் கொண்டு மிகவும் மெதுவாகவே சுவாசிக்கின்றன. அத்தோடு இவற்றின் நுரையீரல் பெரிதாக இருப்பதால் ஒருமுறை கடலின்மேல் தளத்திற்கு வந்து தேவையான ஒட்சிசனை நுரையீரலில் நிரப்பிக் கொண்டு கடலுக்கடியில் பல மணிநேரங்கள் பயணிக்கின்றன. ஆமைகள் மிக மெதுவாக சுவாசிப்பதாலும் மிக மெதுவாக அவற்றின் இதயம் துடிப்பதாலும் இவை அதிக காலம் உயிர்வாழ்வதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஆமைகள் சுமார் 100 வயதுக்கும் மேலாக உயிர்வாழக் கூடியன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமான ஆமைகள் எமது கண்களுக்கு சாதுவாகத் தென்பட்டாலும் சிலவகை ஆமைகள் தமக்குள் மூர்க்கமாகச் சண்டையிட்டுக் கொள்கின்றன. Leather Back எனப்படும் இராட்சத ஆமைகள் அவற்றுக்குக் கோபம் வந்தாலோ அல்லது பசி வந்தாலோ இன்னொரு ஆமையுடன் கடுமையாகச் சண்டையிடும். கழுத்துப் பகுதியில் அமைந்துள்ள ஓட்டின் இரு முனைகள் மூலம் அவை ஒன்றை ஒன்று குத்தித் தாக்கிக் கொள்ளும். எப்படியாவது மற்றைய ஆமையை வீழ்த்தி தலைகீழாகக் கவிழ்த்துவிட்டுச் சென்று விடும். இவற்றின் முதுகு ஓடுகள் பெரிதாகவும் உயரமாகவும் இருப்பதன் காரணத்தால் தமது கால்களையோ தலையையோ பயன்படுத்தி இவற்றால் மீண்டும் சரியாக எழுந்துநிற்க முடியாது. எனவே, அவ்வாறே நீண்ட நாட்கள் இருந்து தாகத்தாலும் பசியாலும் இறந்துவிடுகின்றன.

ஆமைகளின் வகைகளுக்கு ஏற்ப பாதங்கள் வித்தியாசமாகப் படைக்கப்பட்டுள்ளன. தரைப் பாங்கான பிரதேசங்களில் வாழும் ஆமைகளின் கால் பாதங்களில் விரல்களும் நகங்களும் காணப்படுகின்றன. எனவே அவற்றால் தரையில் சுலபமாக நடக்க முடியும். ஆமையால் தரையில் மணிக்கு 70 மீட்டர் வேகத்தில்தான் பயணிக்க முடியும். ஆனால் நீரில் மிக வேகமாக அவை நீந்திச் செல்லும். நீரில் வாழக்கூடிய ஆமைகளின் கால்கள் துடுப்புபோன்று அமைந்திருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். இவை நீரில் மணிக்கு 40 மைல் வேகத்தில் நீந்திச் செல்கின்றன. ஆனால் மணற் தரையில் அவற்றால் விரைவாகச் செல்ல முடியாது; ஊர்ந்த வண்ணமே செல்கின்றன.

ஆமைகளின் ஓடுகள் உண்மையில் ஒரு விசேடமான படைப்புதான். ஒவ்வொரு ஆமையின் ஓட்டிலும் காணப்படுகின்ற வித விதமான சித்திரங்களின் அழகே அந்த படைத்தோனின் புகழ் பாடச் சொல்கின்றன. பெரும்பாலும் ஓட்டின் வடிவங்களை வைத்தே ஆமைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

இவ் ஓடுகள் மிகவும் கடினத் தன்மை வாய்ந்தவை. இவ்வமைப்பு ஆமைகளுக்குப் பாதுகாப்புக் கவசமாகக் காணப்படுகின்றது. எதிரிகளிடம் ஆமைகள் மாட்டிக் கொண்டால் உடனே தமது தலையையும் கால்களையும் வாலையும் ஓட்டினுள்ளே இழுத்துக் கொள்ளும். அதனால் எதிரியால் அக்கடினமான ஓட்டை உடைக்க முடி



**WWF (World Wildlife Fund) இந்த ஆண்டை (2011) ஆமை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது**

யாது போய்விடும். ஓட்டின் வெளிப்பகுதி தடிப்பாக, கடினமாக இருப்பினும் அதன் உட்பகுதி ஆமைக்குச் சொகுசான முறையில் மென்மையாக அமைந்திருக்கும். அனைத்து ஆமைகளாலும் இவ்வாறு தமது ஓட்டுக்குள் அடங்கிவிட முடியாது. ஏனெனில் சில ஆமைகளின் உடல் அவற்றின் ஓட்டைவிடவும் பெரிதாக இருக்கும்.

அனேகமாக ஆமைகள் தாவரங்களையே உணவாக உட்கொள்கின்றன. நீர் நிலைகளில் காணப்படும் சிறு தாவரங்களையும் பாசித் தாவரங்களையும் உட்கொள்ளும் அதே சமயம் சிறிய மீன்களையும் முட்டைகளையும் உட்கொள்ளவும் செய்கின்றன. இதனை ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட 'டினா ஒல்சன்' என்ற பல்லுயிர் ஆய்வாளர், "கடலுக்கடியில் விளையும் புற்களையும் இவை உணவாகக் கொள்கின்றன. அவை தொடர்ச்சியாக வெட்டப்படும் போதுதான் புதிதாகத் தழைக்கும். ஆமைகளின் எச்சம், புற்களின் வளர்ச்சிக்கு முக்கியமானது. இவை கடலின் ஆதாரசக்தி என்று கூறினால் மிகையாகாது" என தமது ஆய்வுக் கட்டுரையை முடிக்கின்றார்.

ஆமைகள் முட்டையிட்டே குஞ்சுகளைப் பொறிக்கின்றன. முட்டையிடும் தறுவாயை அடையும் ஒரு கடல் ஆமை, கரைப் பகுதியை வந்தடைந்து பாதுகாப்பான ஒரு மணற் பிரதேசத்தில் ஆழமானதொரு வளையைத் தோண்டும். பின்பு அதனுள் முட்டையிட்டுவிட்டு வளையைத் தம் கால்களாலேயே மூடிவிட்டுச் சென்றுவிடும். சாதாரண ஆமைகள் ஒரு தடவையில் சுமார் 50-100 முட்டைகளை இடுகின்றன. கடலாமைகள் 40 முதல் 200 முட்டைகளையும் இடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ஆமைகள் நூற்றுக்கணக்கில் முட்டையிட்டாலும் அவை அனைத்துமே குஞ்சுகளாகப் பிறந்து கடைசி வரை உயிர் வாழ்வதில்லை. சில முட்டைகள் விலங்குகளால் அழிவுக்குள்ளாகின்றன. குஞ்சுகளாக வெளியே வந்ததும் அவற்றுள் சில கடல் பறவைகளாலும் விலங்குளாலும் உணவாக்கப்படுகின்றன. மனிதன்கூட சிலபோது இவற்றை அழிவுக்குள்ளாக்குகிறான். எனவே, இடப்படும் நூற்றுக்கணக்கான முட்டைகளில் ஓரிரண்டு ஆமைகளே எஞ்சி இறுதிவரை உயிர் வாழ்கின்றன. அனைத்து வகையான ஆமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற முயற்சியில் அமெரிக்கப் பண்ணை ஒன்றில் ஆமைகள் பாதுகாப்பாக வளர்க்கப்படுகின்றன. இதன் காப்பாளர் ஜோன் ரூட்ஸ் உலகின் அனைத்து ஆமைகளிலும் 20 சதவீதமானவை அழிந்துவிட்டதாகவும் வருடத்திற்கு 2 இலட்சம் ஆமைகள் உலகெங்கும் கொல்லப்படுவதாகவும் கூறுகின்றார்.

ஆமைகள் முட்டையிடும்போது முதலில் ஏழு இடங்களில் வளைகளைத் தோண்டும். பின்னர் அதில் ஒன்றில் மாத்திரம் முட்டைகளை இட்டுவிட்டு அதனை மண்ணால் மூடிவிட்டுச் செல்லும். கடற் பெண் ஆமைகள் முட்டையிடுவதற்காக கூட்டம் கூட்டமாகக் கரையை நோக்கி வருகின்றன. அத்தோடு இவை இரவு காலங்களில் மட்டுமே முட்டையிடும் இயல்பையும் கொண்டுள்ளன.

சூரிய வெப்பத்தினை ஆதாரமாகக் கொண்டு சிறிது காலத்தில் அந்த முட்டைகளில் இருந்து குஞ்சுகள் உருவாக்குகின்றன. பின் அக்குஞ்சுகள் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வருகின்றன. ஆமைகளில் ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டை நிர்ணயிக்கும் சக்தியாக அதன் வளைகள் விளங்குகின்றன. அவ்வளைகள் கதகதப்பாக காணப்படின் உள்ளே இருக்கும் முட்டைகளிலிருந்து பெரும்பாலும் பெண் குஞ்சுகள் வெளிவருகின்றன. மிகவும் குளிர்ச்சியான வளைகளில் அதிகமாக ஆண் ஆமைகள் பிறக்கின்றன. தற்போதைய கணக்கெடுப்பின்படி பெண் ஆமைகளே அதிகம் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

வெப்பம் எவ்வாறு பாலினத்தை நிர்ணயிக்கின்றது என்பதை அறிவியலுக்கு விடப்பட்டுள்ள சவாலாகவே அறிஞர்கள் கருதுகின்றனர். இறை ஆற்றலின் முன் காரண காரிய விதியை நம்பும் மனித அறிவு எவ்வளவு பலவீனமானது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!

முட்டையிலிருந்து வெளிவரும் ஆமைகளிடம் ஓர் அற்புதம் நிகழ்வதை எம்மால் அவதானிக்க முடியும். வெளியே வரும் குஞ்சுகள் அனைத்துமே கடல் திசையை நோக்கிப் பயணிக்கின்றன. அவற்றை இடைமறித்து வேறு திசையில் திருப்பி வைத்தால்கூட மீண்டும் கடல் திசையை நோக்கித் திரும்பிச் சென்றுவிடும். அப்படியானதொரு இயல்பை வல்லவன் அல்லாஹ் அவற்றுக்குக் கொடுத்துள்ளான். தாயின் வாசனையை உணர்ந்து அவை கடலை நோக்கிச் செல்வதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சில ஆமைகள் தாம் பிறந்த இடத்திலிருந்து சில கி.மீ.களுக்கு உள்ளேயே வாழ்ந்து மடிகின்றன. ஆனால் அதிகமான ஆமைகள் தாம் பிறந்த இடத்தை விட்டும் ஆயிரக்கணக்கான கி.மீ.களுக்கு அப்பால் தேசாந்திரப் பயணம் செல்கின்றன. பெண் ஆமை எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் தான் பிறந்த இடத்துக்கே மீள வந்து முட்டைகளை இட்டுச் செல்லும்.

ஒரு பெண் ஆமையின் ஓட்டுப் பகுதியில் ட்ரான்ஸ்மீட்டர் பொருத்தப்பட்டு செய்மதி ஒன்றின் மூலம் அதன் பயணம் கண்காணிக்கப்பட்டது. அது தான் முட்டையிடும் பிரதேசமான பப்புவா நியுகினியா கடற்கரைக்கு 647 நாட்கள் பயணித்து 12,744 மைல் தொலைவு கடந்துசென்று சரியான இலக்கை அடைந்தது. செல்லும் வழியெங்கும் சொல்லொணாத் துன்பங்களையும் ஆபத்துக்களையும் சந்தித்தவாறே சென்றமை அவதானிக்கப்பட்டது.

ஆமைகளில் அல்லாஹ் பல அற்புதங்களை வைத்துள்ளான். ஆமைகளின் பாதுகாப்புக் கவசமாகக் காணப்படும் கடினமான ஓடு, நீண்ட நேரம் சுவாசிக்காமல் நீருக்கு அடியில் பயணிக்கும் ஆற்றல், பல ஆயிரம் மைல்கள் பயணித்தாலும் பிறந்த இடத்திற்கே மீண்டும் வந்து முட்டையிடும் ஞாபக சக்தி, எதிரி விலங்குகளால் இனங்கான முடியாது ஏழு வளைகளைத் தோண்டி ஒன்றில் மாத்திரம் முட்டையிடும் தந்திரம், பாலினத்தை நிர்ணயிப்பதில் வெப்ப சக்தி வகிக்கும் பங்கு, முட்டையிலிருந்து வெளியேவரும் குஞ்சுகள் நேராகக் கடல் திசையை நோக்கியே பயணிக்கும் தன்மை போன்ற இவை யாவும் இறைவனின் படைப்பாற்றலின் அற்புதங்களை எடுத்துக் காட்டுகின்றன. அவன் யாவற்றையும் அறிந்தவன்; சர்வ வல்லமை மிக்கவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் அகரம்

## அரசியல் பொது அறிவு

- இலங்கையின் தற்போதைய பிரதமர்
  - டி.எம். ஜயரட்ன
- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் - ஏ.எல்.எம். அதாஉல்லாஹ்
- தற்போதைய சபாநாயகர்
  - சமல் ராஜபக்ஷ
- கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சர் - ரிஷாட் பதியுதீன்
- போக்குவரத்து அமைச்சர்
  - குமார வெல்கம
- கல்வி அமைச்சர் - பந்துல குணவர்தன
- இடர் முகாமைத்துவ அமைச்சர்
  - ஏ.எச்.எம். பௌசி
- மீள் குடியேற்ற அமைச்சர்
  - மில்ரோய் பெர்ணான்டோ
- விவசாய அமைச்சர்
  - மஹிந்த யாப்பா அபேவர்தன
- சுகாதார அமைச்சர்
  - மைதிரிபால சிறிசேன
- வெளிவிவகார அமைச்சர் - ஜீ.எல். பீரிஸ்
- விளையாட்டு துறை அமைச்சர்
  - சி.பி. ரத்நா்யக
- தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் - ஜீவன் குமாரதுங்க

– ஏ.எல்.எப். ஸிஹானா,
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க, ஓட்டமாவடி

## வர்ணங்களின் வண்ணங்கள்

**நீலப் புரட்சி**
- மீன், கடல் உயிர் உற்பத்திப் பெருக்கம்

**வெண்மைப் புரட்சி**
- பால் உற்பத்திப் பெருக்கம்

**பசுமைப் புரட்சி**
- விவசாய உற்பத்திப் பெருக்கம்

**மஞ்சள் புரட்சி**
- எண்ணெய் உற்பத்திப் பெருக்கம்

**மண்ணிறப் புரட்சி**
- மரபு சாரா எரிபொருள் பெருக்கம்

**நீலப் புத்தகம்**
- பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கை

**மஞ்சள் புத்தகம்**
- பிரான்ஸ் அரசாங்க அறிக்கை

**கிரே புத்தகம்**
- ஜப்பானிய அரசாங்க அறிக்கை

**வெள்ளைப் புத்தகம்**
- சீன அரசாங்க அறிக்கை

**ஒரேஞ் புத்தகம்**
- நெதர்லாந்து அரசாங்க அறிக்கை

**சிவப்பு புள்ளி விபர அறிக்கை**
- அழிவு, ஆபத்து, விலங்கு, தாவரம் பற்றியது

**பச்சைப் புத்தகம்**
- இத்தாலி, ஈரானிய அரசாங்க அறிக்கை

**வெள்ளை அறிக்கை**
- இந்திய அரசாங்க அறிக்கை

**நீல மாளிகை**
- தென் கொரிய நாட்டின் அதிபர் மாளிகை

– எஸ்.எல்.எம். சஹி,
தரம் – 9, கமு/ அல்மிஸ்பாஹ் ம.வி. கல்முனை

## அறிந்து கொள்ளுங்கள்

ஒளியின் வேகம் என்ன?
**செக்கனுக்கு 3000,000, கி.மீ. (181, 000 மைல்)**

ஒளி சூரியனிலிருந்து புவிக்கு வர எடுக்கும் நேரம் யாது?
**8 நிமிடம் 18 செக்கன்கள்**

வேகம் கூடிய கதிர் யாது? காமா (γ) கதிர்

மனநோய் மருத்துவத்தின் முன்னோடி யார்?
**சிக்மென்ட் ஃபிரொய்ட்**

லேசர் கதிரை உருவாக்கியவர் யார்? கோர்டன் கோல்ட்

கழுகு எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்? 50 ஆண்டுகள்

அநாதை ஓய்வூதியம் அளிக்கும் நாடு எது? சுவீடன்

வெள்ளை இரத்தம் கொண்ட உயிரினம் எது? வெட்டுக் கிளி

ஏ.ஆர்.எப். றாபியா, தரம் – 9, கிரி/ மெத்தகெடிய ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையும் துன்பமும்

வாழ்க்கைப் பயணப் பாதையில் மனிதன் பல்வேறுபட்ட இன்னல்கள், இடையூறுகளை எதிர்கொள்ள நேர்கிறது. சிலவேளை அவன் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அவனோடு பின்னிப் பிணைந்து வாழ்க்கைப் பயணத்தில் தொடரவும் செய்கின்றன. எனவே, உலக வாழ்க்கையில் ஏற்படும் விரக்தி, ஏக்கம், ஏமாற்றம், திடீர் திருப்பம், கஷ்டங்கள் போன்றவற்றிலிருந்து ஒரு முஸ்லிமுக்கு அரண் செய்வது பொறுமையே!

இறை விசுவாசத்தை தன் இதயத்தில் உறுதியாகப் பதித்துக் கொண்ட ஒரு முஸ்லிமின் வாழ்வில் பொறுமை மிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ஒரு முஃமினின் வாழ்வில் அடிப்படையாக அமைந்து துன்பத்திலிருந்து இன்பத்திற்கு அவனை அழைத்துச் செல்லும் ஓர் ஒளி விளக்காகவே பொறுமை திகழ்கின்றது.

ஒரு முஃமின் துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல், பின்னர் வெளிச்ச விடியல் இருப்பது போல துன்பத்தில் பொறுமை காக்க வேண்டும்; சுவனத்தில் இன்பம் உண்டு என்று எண்ண வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் எனது வாழ்வில் ஒரு மகத்தான விடியலைக் கொண்டு வருவான் என்ற உறுதியான நம்பிக்கையோடு தனது வாழ்வில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்ள வேண்டும்.

வாழ்க்கை என்ற திறந்த பரந்த வெளியில் வலம் வரும் கருமை நிற மேகங்களைக் கண்டு அஞ்சிப் பதுங்கி விடாது இறை நம்பிக்கை நிறைந்தவர்களாகவும் எச்சந்தர்ப்பத்திலும் மகத்தான பொறுமையைக் கடைப்பிடித்து இறையன்பைப் பெற்றவர்களாகவும் வாழ்வோமாக!

"எவர் பொறுமையைக் கடைப்பிடித்து மன்னித்து விட்டாரோ நிச்சயமாக அது காரியங்களில் உறுதியானதாகும்."
(அல்குர்ஆன் 42: 43)

– எப். சப்னா ரஹ்மதுல்லாஹ்,
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள்எலிய

# ஒரு கொடியில் பல மலர்கள்

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்ற ஏழு பேரில் கடைசியாக உள்ளவர் யார்?

2. "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என் நெற்றியிலும் வயிற்றிலும் கை வைத்து துஆச் செய்தார்கள். அந்த சம்பவத்தை இப்போது நினைத்தால்கூட என் ஈரல் குளிர்ச்சி அடைவதைப் போல் நான் உணர்கிறேன்" என்று கூறிய நபித் தோழர் யார்?

3. 'அல்லாஹும்ம இன்னீ, அஊதுபிக மினல் புக்லி, வஅஊது பிக மினல் ஜுப்னி, வஅஊது பிக மின் அன் உறத்த இலா அர்தலில் உமுரி வஅஊது பிக மின் ஃபித்னதித் துன்யா வஅதாபில் கப்ர்' என்ற துஆவை எழுத்து கற்பிக்கப்படுவதை போல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுத் தந்தார்கள் என்று கூறிய நபித் தோழர் யார்?

4. (யூத அறிஞரில் இருந்து முஸ்லிமான) அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தவிர பூமியின் மீது நடக்கின்ற வேறு எவரைக் குறித்தும் இவர் சொர்க்கவாசி என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூற நான் கேட்டதில்லை என்று கூறிய நபித் தோழர் யார்?

5. தன் சொத்துக்களில் 1/3 பங்கை தான தர்மத்திற்காக விட்டுச் சென்ற நபித்தோழர் யார்?

- இந்த அற்புதமான நபித் தோழர் யார் தெரியுமா?

அவர்தான் ஸஅத் பின் அபீவக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு)

– சப்னா ஹுஸைன், வெலம்பொட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

– எம்.எச்.எப். இபாதா, காத்தான்குடி

*உலக தபால் யூனியன் தலைமையகம் எங்கேயுள்ளது?*
**சுவிட்சர்லாந்து**

*உடற்பயிற்சி கல்வியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?*
**ஹாரிகிரேபக்**

*புகையிலையை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு எது?*
**அமெரிக்கா**

*'தங்க தீபகற்பம்' என்று வர்ணிக்கப்படும் நாடு எது?*
**தாய்லாந்து**

*அமைதிக்கான நோபல் பரிசை அதிகம் பெற்றவர்கள் எந்த நாட்டுக்காரர்கள்?*
**அமெரிக்கா**

*இந்திய ஏவுகணை தொழில்நுட்பத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் யார்?*
**அப்துல் கலாம்**

*முதன் முதலாக இரட்டை மாடி புகையிரதத்தை அறிமுகம் செய்த நாடு எது?*
**அமெரிக்கா**

*உயிர்க்காப்பு படகு எந்த மரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது?*
**ஓக் மரப்பட்டை**

*உலகின் மிகப் பெரிய கம்பியூட்டர் கம்பெனி எது?.*
**ஐ.பி.எம்**

# மினித் தகவல்கள் சில

உலக வங்கியின் (World Bank) தலைமையகம் அமெரிக்காவில் உள்ளது.

போர்த்துக்கல் நாட்டின் நாணய அலகு எஸ்கியூடோ (Escudo).

மியன்மார் நாட்டின் நாணயம் கியாட் (Kyat).

யூரோ (Euro) நாணயம் 1999.01.01 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 2000.01.01 உலக வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நைஜீரிய நாட்டின் பண அலகு நைரா (Naira).

நைஜீரியா நாட்டின் மிகப் பெரிய நகரம் லாகோஸ் (Lagos).

ரொடிசீயா என அழைக்கப்பட்ட நாடு 1979ல் சிம்பாப்வே என பெயர் மாற்றப்பட்டது.

அபிசீனிய நாட்டின் தற்போதைய பெயர் எத்தியோப்பியா.

– எம். ஸபியா மஷ்ரதாப்
இரண்டாம் வருடம், பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க., ஓட்டமாவடி

# இலங்கையின் மலைகள்

**பீதுருதாலகால**
2524 மீற்றர் உயரமான இம்மலை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் மிக உயரமான மலையாகும்.

**கிரிகல்பொத்த**
2396 மீற்றர் உயரமான இம்மலை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் இரண்டாவது உயரமான மலையாகும்.

**தொட்டுபொல**
2359 மீற்றர் உயரமான இம்மலை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் மூன்றாவது உயரமான மலையாகும்.

**சிவனொளிபாத**
2243 மீற்றர் மீற்றர் உயரமான இம்மலை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் ஐந்தாவது உயரமான மலையாகும். இங்கிருந்தே களனி, வளவை நதிகள் ஆரம்பிக்கின்றன.

**கிக்கிலிமான**
2240 மீற்றர் உயரமான இம்மலையில் இருந்தே ரம்பொட ஓயா ஆரம்பிக்கின்றது. இது இலங்கையின் ஆறாவது உயரமான மலையாகும்.

**ஹக்கல**
2170 மீற்றர் உயரமான இம்மலை நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**நமுனுகல**
2036 மீற்றர் உயரமான இம்மலை ஊவா மாகாணத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் பதின் மூன்றாவது உயரமான மலையாகும்.

**ரிட்டிகல**
766 மீற்றர் உயரமான இம்மலை வடமத்திய மாகாணத்தின் உயரமான மலையாகும். இது 3,777 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

– அ.ந. றிஸ்வானுல் ஜென்னா, –
தரம் – 9, தி/ அப்துல் மஜீது வித்தியாலயம், கிண்ணியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகளின் தூக்கம்

அபூ உபைதா அஸ்மா, தரம் 8
- கமு/ அல்மனார் ம.க., மருதமுனை -

ஸ்விப்ட் பறவைகள் ஒன்றை ஒன்று கட்டிக் கொண்டு கூட்டமாகத் தூங்குகின்றன.

கிவி எனும் பறவை பகல் வேளையில் பூமிக்கடியில் காணப்படும் விரிசல் வளைவுகளில் நுழைந்து கொண்டு தூங்குகின்றது.

த்ரஷ் எனும் பறவை குளிர் காலத்தில் தினமும் 15 மணி நேரம் தூங்கும். கோடை காலத்தில் 10 மணி நேரம் தூங்கும்.

கிரீப்பா எனும் பறவை மரப் பொந்துகளில் மல்லாந்து கொண்டே தூங்கும்.

## வைர வரிகள் சில

எம். முஸ்தபா முஹம்மது இன்சாப்
தரம் 10, சது/ அல்அஷ்ரப் ம.ம.வி. இறக்காமம்

ஒருவர் கல்வி பெற்றால் ஊருக்கே வழி பிறக்கும்.

ஒழுக்கம் இல்லாத கல்வியை விட கல்வி இல்லாத ஒழுக்கம் மேலானது.

கல்வி கற்பது பொருள் ஈட்டுவதற்கல்ல.

திட்டமிடக் கற்றுக் கொள்ளுங்கள்; பிறகு கற்றுக் கொள்ளத் திட்டமிடுங்கள்.

புத்தகத்தை விட சிறந்த நண்பன் இன்னும் பிறக்கவில்லை.

ஒரு துளி மை பத்து லட்சம் பேர்களைச் சிந்திக்க வைக்கும்.

# பொது அறிவு

- தாமரையின் வித்து எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு முளைக்கும்?
  400 ஆண்டுகளுக்குப் பிறகு
- இடம் விட்டு இடம் நகரும் தாவரம் எது?
  கிளாபிடோ மோனஸ்
- உலகிலே மிகப் பெரிய தனி இலையுடைய தாவரம் எது?
  இராட்சத நீரல்லி
- எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும் இலைகளையுடைய தாவரம் எது?
  ஜீவப் பிரணன்
- நல்லெண்ணெய் எத் தானியத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது?
  எள்ளு
- பாலைவனத்தில் மட்டும் இருக்கும் தாவரம் எது?
  ஸீரோபைட்ஸ் தாவரம்
- உலகிலேயே மிகப் பெரிய பூ எது?
  டைட்டான் ஆரமி
- உலகிலேயே மிக உயரமான மரம் எது?
  செக்கோயா மரம்
- கிரிக்கட் மட்டை செய்ய பயன்படுத்தப்படும் மரம் எது?
  விலோ மரம்
- எந்த நாட்டின் நகரம் காற்று நகரம் என அழைக்கப்படுகிறது?
  அமெரிக்காவின் சிக்காக்கோ நகரம்
- புதிய ஏழு அதிசயம் எந்த நாட்டில் வெளியிடப்பட்டது?
  போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில்
- புதிய ஏழு உலக அதிசயங்கள் பெயரிடப்பட்ட சிறப்புத் தினம் எப்போது?
  2007.07.07
- தாய்லாந்து ஆரம்ப காலத்தில் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
  சியம் தேசம்
- ஆறுகள் இல்லாத நாடு எது?
  சஊதி அரேபியா

– எச்.எம். பாத்திமா
அல்ஹிலால் புரம்,
தம்பாளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத தகவல்கள்

**பெரிய தேசியக் கொடி**

உலகிலேயே பெரிய தேசியக் கொடி சமீபத்தில் அமெரிக்காவின் இருநூறாவது சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக தயாரிக்கப்பட்டது. இதன் நீளம் 350 அடி, அகலம் 190 அடி. இது நைலோன் துணியினால் தயாரிக்கப்பட்டது. இதற்கு 75, 000 டொலர் செலவிடப்பட்டது.

**நீளமான பெயருடைய மலை**


நீளமான பெயர் கொண்ட மலை நியூஸிலாந்து நோர்த் ஐலண்டில் ஸதர்ன் ஹாக் ஸ்பே பகுதியில் அமைந்துள்ளது. 84 எழுத்துக்களைக் கொண்ட அப்பெயரை வாசிக்க முடிகிறதா பாருங்கள்!

"Taumatawhakatangi hangakouauata matea turi pukakapikima ungha Horonu kupoka whenuakiti hatahu"

**நீளமான பெயருடைய ரயில் நிலையம்**

உலகில் மிக நீளமான பெயர் கொண்ட ரயில் நிலையம் பிரித்தானியாவின் வேல்ஸ் நகரில் உள்ளது. இது 57 எழுத்துக்களைக் கொண்ட பெயருடைய ரயில் நிலையமாகும். இதை உச்சரிக்க முடிகிறதா பாருங்கள்.

"LLANFFAIR PWLLGWYNGY LLGOGERY CHWYRND ROBWLLANTY SILIOGO GOGOCH"




என்ன தலை சுற்றுகிறதா...?

இந்த நீளமான பெயருக்காக ஆண்டு தோறும் பல உல்லாசப் பயணிகள் இந்த ரயில் நிலையத்தை காண வருகிறார்கள். பெயர்ப் பலகையின் கீழ் நின்று புகைப்படமும் எடுத்துக் கொள்கிறார்கள்.

– இம்லா சஹறதுல்லாஹ்
தரம்– 6, ஸாஹிரா மு.வி., எல்லலமுல்ல

**மாகாண அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு ஏற்படுத்திய திட்டங்கள்**

வடக்கின் வசந்தம்
**- வட மாகாணம்**

வயம்ப புபுதுவ
**- வடமேல் மாகாணம்**

கிழக்கின் உதயம்
**- கிழக்கு மாகாணம்**

புபுதுவ வெல்லஸ்ஸ
**- ஊவா மாகாணம்**

ரஜரட்ட நவோதயா
**- வடமத்திய மாகாணம்**

சப்ரகமுவ அருண லோகய
**-சப்ரகமுவ மாகாணம்**

கந்துரட நவோதய
**- மத்திய மாகாணம்**

ருகுணு உதாணய
**- தென் மாகாணம்**

ரன் அருண
**- மேல் மாகாணம்**

## இலங்கை

அடுத்த குடிசனத் தொகை மதிப்பீடு நடத்தப்படவுள்ள வருடம் – 2021

நீண்ட நீர்ச்சுரங்கப் பாதை – மேல் கொத்மலை நீர்ச் சுரங்கப் பாதை

புதிய துறைமுகம் – மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் (2010.11.18 ஆரம்பம்)

முதலாவது கண் வங்கி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் திறக்கப்பட்டது.

முதலாவது அனல் மின்சார நிலையம் புத்தளம் நுரைச்சோலையில் (தும்பபண்ணி) புதிதாக அமைக்கப்பட்டுள்ள லக் விஜய மின் நிலையம் (2011.03.22 ஆரம்பம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் اللغة العربية அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## اَلْمَصْدَرُ الْمُؤَوَّلُ

**அல்மஸ்தருல் முஅவ்வல்**

நிகழ்கால வினையுடன் أَنْ என்ற இடைச் சொல் இணைந்து வருவது அல்மஸ்தர் அல்மு அவ்வல் எனப்படும்.

أَنْ + يَقْرَأُ

أَنْ يَقْرَأَ

அவன் வாசிப்பது

أَنْ இணைந்து வரும்போது நஸ்பு பெற்று நிகழ்கால வினைச்சொல் அமையப்பெறும்.

أَنْ + يَقْرَأُ مُحَمَّدٌ

أَنْ يَقْرَأَ مُحَمَّدٌ

முஹம்மத் வாசிப்பது

أَنْ + يَقْرَأُ + مُحَمَّدٌ + اَلْكِتَابَ

أَنْ + يَقْرَأَ مُحَمَّدٌ الْكِتَابَ

முஹம்மத் புத்தகத்தை வாசித்தல்/ வாசிப்பதானது

أَنْ + تَطْبَخُ فَاطِمَةُ الطَّعَامَ

أَنْ تَطْبَخَ فَاطِمَةُ الطَّعَامَ

பாத்திமா உணவு சமைத்தல்/ சமைப்பதானது

اَلْمَصْدَرُ الْمُؤَوَّلُ

↓

أَنْ + اَلْفِعْلُ الْمُضَارِعُ

| | | | |
|---|---|---|---|
| يَكْتُبُ | ← | أَنْ يَكْتُبَ | அவன் எழுதுவது |
| يَكْتُبَانِ | ← | أَنْ يَكْتُبَا | அவர்கள் இருவரும் எழுதுவது |
| يَكْتُبُوْنَ | ← | أَنْ يَكْتُبُوْا | அவர்கள் எழுதுதல் |
| تَكْتُبُ | ← | أَنْ تَكْتُبَ | அவள் எழுதுதல் |
| تَكْتُبَانِ | ← | أَنْ تَكْتُبَا | அவர்கள் இருவரும் எழுதுதல் |
| يَكْتُبْنَ | ← | أَنْ يَكْتُبْنَ | அவர்கள் எழுதுதல் |
| تَكْتُبُ | ← | أَنْ تَكْتُبَ | நீ எழுதுதல் |
| تَكْتُبَانِ | ← | أَنْ تَكْتُبَا | நீங்கள் இருவரும் எழுதுதல் |
| تَكْتُبُوْنَ | ← | أَنْ تَكْتُبُوْا | நீங்கள் எழுதுதல் |
| تَكْتُبِيْنَ | ← | أَنْ تَكْتُبِيْ | நீ எழுதுதல் (பெண்பால்) |
| تَكْتُبَانِ | ← | أَنْ تَكْتُبَا | நீங்கள் இருவரும் எழுதுதல் |
| تَكْتُبْنَ | ← | أَنْ تَكْتُبْنَ | நீங்கள் எழுதுதல் |
| أَكْتُبُ | ← | أَنْ أَكْتُبَ | நான் எழுதுதல் |
| نَكْتُبُ | ← | أَنْ نَكْتُبَ | நாங்கள் எழுதுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ظَرْفُ اَلزَّمَانِ وَ اَلْمَكَانِ

## காலம், இடம் குறித்து வரும் பெயர்ச்சொற்கள்

செயல் நடந்த காலத்தைக் காட்டுவது ظَرْفُ الزَّمَانِ

செயல் நடந்த இடத்தைக் காட்டுவது ظَرْفُ اَلْمَكَانِ

எனவும் அழைக்கப்படுகிறது. இவை இரண்டு பெயர்ச் சொற்களும் (நஸ்பு) பெற்ற நிலையில் இருக்கும்.

### ظَرْفُ اَلْمَكَانِ

| | |
|---|---|
| பின்னால் | وَرَاءَ / خَلْفَ |
| முன்னால் | أَمَامَ |
| இடையே | بَيْنَ |
| மேலால் | فَوْقَ |
| கீழால் | تَحْتَ |
| அருகே / இடத்தில் | عِنْدَ |

இச்சொற்களுக்குப் பின்னால் வருகின்ற சொற்கள் பெயர்ச்சொற்களாகவும் ஜர்ரு உடைய நிலையிலும் அமையப் பெற்றிருக்கும்.

விளக்கத்துக்காக பின்வரும் உதாரணங்களை நோக்குவோம்.

1. اَلْبَيْتُ وَرَاءَ اَلْمَسْجِدِ

வீடு பள்ளிவாசலுக்குப் பின்னால் இருக்கிறது.

2. اَلْمُدِيْرُ أَمَامَ اَلْمَكْتَبِ

அதிபர் காரியாலயத்துக்கு முன்னால் இருக்கிறார்.

3. اَلْمَسْجِدُ بَيْنَ اَلْمَدْرَسَةِ وَ اَلْمَكْتَبَةِ

பள்ளிவாசல் வாசிகசாலைக்கும் பாடசலைக்கும் இடையே இருக்கின்றது.

4. اَلْكِتَابُ فَوْقَ اَلْمَكْتَبِ

புத்தகம் மேசையின் மேல் இருக்கின்றது.

5. اَلْكُرَةُ تَحْتَ اَلسَّيَّارَةِ

பந்து வாகனத்துக்கு கீழால் இருக்கின்றது.

6. اَلطَّالِبُ عِنْدَ اَلْبَابِ

மாணவன் கதவருகே இருக்கிறான்.

| | |
|---|---|
| شَمَالَ | வடக்கே |
| جَنُوْبَ | தெற்கே |
| شَرْقَ | கிழக்கே |
| غَرْبَ | மேற்கே |

7 تَقَعُ اَلْمَدْرَسَةُ شَمَالَ اَلْمَسْجِدِ

பாடசாலை பள்ளிவாசலுக்கு வடக்கே அமைந்துள்ளது.

8. تَقَعُ سِرِيْلاَنْكَا جَنُوْبَ اَلْهِنْدِ

இலங்கை இந்தியாவுக்கு தெற்கே அமைந்துள்ளது.

9. سِرِيْلاَنْكَا جَزِيْرَةٌ وَاقِعَةٌ وَسَطَ اَلْمُحِيْطِ اَلْهِنْدِى

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு தீவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10ம் தரம்

**வினா**

1. 1) பின்வரும் அறிஞர்களுள் பிரான்சியப் புரட்சியோடு தொடர்புடைய அறிஞர்களைத் தெரிவு செய்க.

மொண்டஸ்கியூ, கார்ள் மாக்ஸ், ரூசோ, வால் ரேயர், ஜீன் போடின் (3 புள்ளிகள்)



2. i. அருகில் படத்தில் இருப்பவரின் பெயர் என்ன?
   ii. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   iii. அவர் இந்தியாவில் எந்த இடத்தை அடைந்தார்?
   iv. அவர் இந்தியாவிற்கு வந்த ஆண்டு எது?

3. பிரான்சியப் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக.

4. ரஷ்யப் புரட்சி ஏற்பட்டமையினால் ஏற்பட்ட விளைவுகளை விளக்குக.

**விடைகள்**

1. 1) மொண்டஸ்கியூ, ரூசோ, வால் ரேயர்

2. i. வாஸ்கொடகாமா
   ii. போர்த்துக்கல்
   iii. கள்ளிக் கோட்டை
   iv. *1948*

3. சர்வாதிகார ஆட்சி

பிரான்சியப் புரட்சிக்கு அங்கு நடைபெற்ற சர்வாதிகார ஆட்சியே காரணமாகும். 16ம் லூயி மன்னன் சர்வாதிகார ஆட்சி நடத்தினான். சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய மூன்று வகையான அதிகாரங்களையும் அரசனே பிரயோகித்தான். "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால், பிறந்த பிறகு அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்படுகிறான்" என்று ரூசோ கூறினார். பிரித்தானியாவில் சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய 3 அதிகாரங்களும் வெவ்வேறு தரப்பினரிடம் இருப்பதனால் தான் அங்கு மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்று மொண்டஸ்கியூ கூறினார். சர்வாதிகார ஆட்சி நடத்திய மன்னன், தனக்கு எதிராக செயல்படுவோரை 'பஸ்ரில்' சிறைச்சாலையில் அடைத்து சித்திரவதைப்படுத்தினான்.

அறிஞர்களின் கருத்துக்கள்

சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி செய்தமைக்கு அறிஞர்களின் கருத்துக்களும் காரணமாகும். அதாவது கருத்துக்கள் தெரிவித்த மூவருள் மொண்டஸ்கியூ (1689-1755) முக்கியமானவர். இவர் 'சட்டத்தின் சாரம்' என்ற நூலில் அதிகாரங்கள் அனைத்தும் ஒருவரிடம் இருப்பது கூடாது என்று கூறினார். வோல் ரேயர் என்பவர் (1694-1778) சலுகைகளை அனுபவித்த மேலாளர் வர்க்கத்திற்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தார். ரூசோ என்பவர் (1712-1778) 'மன்னன் கடவுளின் பிரதிநிதி' என்ற கூற்றை நிராகரித்தார். இவ்வாறு அறிஞர்கள் கூறிய கூற்றுக்கள் பிரான்ஸியப் புரட்சிக்கு வழிவகுத்தன.

4. பொதுவுடைமை நாடாக ரஷ்யா மாறியது

சார் மன்னர்களின் சர்வாதிகாரப் பிடியில் இருந்த ரஷ்யா பொதுவுடைமை நாடாக மாறியதற்கு 1917ல் நடந்த ரஷ்யப் புரட்சியே காரணமாகும். உலகில் முதலாவது பொதுவுடைமை நாடாக மாறிய பெருமை ரஷ்யாவுக்கே உரியது. ரஷ்யாவின் சனத்தொகையில் 54 வீதமாகக் காணப்பட்ட விவசாயிகள் நில உரிமை பெற்றவர்களாக மாறினர். பலர் வேதனைகளை அனுபவிக்க சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகபோகங்களை அனுபவித்தனர். இந்த நிலையை மாற்ற லெனின் புரட்சிக்கு அத்திபாரமிட்டார். 'தீப்பொறி', 'செய்யவேண்டியது என்ன' ஆகிய நூல்களை எழுதினார். இதனால் மக்கள் மன்னனுக்கு எதிராக அணி திரண்டார்கள். மன்னன் 1917 மார்ச் 15ம் திகதி ஆட்சியைத் துறந்தான். ரஷ்யா உலகின் முதலாவது பொதுவுடைமை நாடாக மாறியது. சொத்துக்கள் தேசிய உடைமையாக மாற்றப்பட்டன

1917 ஒக்டோபர் 24ம் திகதி லெனினும் அவரது புரட்சிக் குழுவினரும் ஆட்சி அமைத்தார்கள். மன்னனின் சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஏற்பட்டது. மன்னனுக்கும் பிரபுக்களுக்கும் சொந்தமாக இருந்த தொழிற்சாலைகளும் பண்ணைகளும் பல்வேறு நிறுவனங்களும் தேச உடைமையாக மாற்றப்பட்டன. தனியாருக்குச் சொந்தமாக இருந்த கனிப்பொருள் சுரங்கங்கள் யாவும் அரசின் சொத்துக்களாக மாற்றப்பட்டன. தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகள் சுரண்டும் நிலை இல்லாமலாக்கப்பட்டது. தனியுடைமை மறைந்து அனைத்து வளங்களும் நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தம் என்ற பொதுவுடைமை மலர்ந்தது.

## 11ம் தரம்

**வினா**

1. பின்வருவனவற்றுள் 72ம் ஆண்டு யாப்புக்குரிய அம்சங்களைத் தெரிவு செய்க.

   பாராளுமன்றம், தேசிய அரசுப் பேரவை, மக்கள் தீர்ப்பு, யாப்பு நீதிமன்றம், அடிப்படை உரிமைகள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி (3 புள்ளிகள்)
2. 78ம் ஆண்டு யாப்பில் இடம்பெற்ற புதிய அம்சங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)
3. 78ம் ஆண்டு யாப்பில் இடம்பெற்ற தேர்தல் முறையிலுள்ள நன்மை ஒன்றையும் குறைபாடு ஒன்றையும் விளக்குக. (5 புள்ளிகள்)
4. ஜனாதிபதி முறையிலுள்ள நன்மை ஒன்றையும் தீமை ஒன்றையும் விளக்குக. (6 புள்ளிகள்)

**விடைகள்**

1. தேசிய அரசுப் பேரவை, யாப்பு நீதிமன்றம், அடிப்படை உரிமைகள்
2. மக்கள் தீர்ப்பு, பாராளுமன்றம், ஓம்புட்ஸ் மேன், விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
3. வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் ஒதுக்கப்படுதல்.

தொகுதித் தேர்தல் முறையில் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை. இதனால் குறைந்த வாக்குகளைப் பெற்ற கட்சி அதிக ஆசனங்களையும் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி குறைந்த ஆசனங்களையும் பெற்றன.

*1970 பொதுத் தேர்தல்*

சுதந்திரக் கட்சி- 1,812,849 வாக்குகள் 91 ஆசனங்கள்

ஐ.தே.கட்சி- 1,876,956 வாக்குகள் 17 ஆசனங்கள்

இக்குறைபாடு விகிதாசார முறையில் நீக்கப்பட்டது. ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்ற வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்பவே தற்போது ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. 2011.10.08ம் திகதி விகிதாசார அடிப்படையில் கல்முனை மாநகர சபைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் 9911 வாக்குகளைப் பெற்ற தமிழரசுக் கட்சிக்கு அதன் வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்ப 4 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. 2006ல் நடைபெற்ற தேர்தலில் இக்கட்சிக்கு 6 ஆசனங்கள் வழங்கப்பட்டன.

*இடைத் தேர்தல் இல்லை*

விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு தொகுதிவாரி தேர்தல் முறை நடைமுறையில் இருந்தது. இம்முறையின்படி பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு வெற்றிடம் ஏற்பட்டால் அவ்விடத்திற்காக இடைத்தேர்தல் நடைபெறும். உதாரணமாக, மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஏகாம்பரம் மரணமடைந்ததைத் தொடர்ந்து அங்கு இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. அந்த இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.ஈ.எம். முஹம்மது அலி வெற்றி பெற்றார். இதன் மூலம் அத்தொகுதி மக்களின் ஜனநாயக உரிமை காப்பாற்றப்பட்டது. ஆனால், விகிதாசார முறையில் இடைத்தேர்தல் நடைபெறுவதில்லை. ஏற்படும் வெற்றிடத்திற்கு கட்சியின் செயலாளரினால் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் மரண மடைந்தால் வேறொரு இனத்தைச் சேர்ந்த ஒரு வரும் நியமிக்கப்படலாம். உதாரணமாக, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஈ.எச். மஹ்ரூப் இறந்ததற்காக சிங்கள இனத் தைச் சேர்ந்த ஆரியபாலா நியமிக்கப்பட்டார்.

**4. பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கலாம்**

பிரச்சினைகள் அதிகமாக உள்ள ஒரு நாட் டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே பொருத்தமானதாகும். ஜனாதிபதி தற்றுணிவு அடிப்படையில் பிரச்சி னைகளைத் தானே தீர்க்க முடியும். பிரதமர் தானே ஒரு தீர்மானத்தை எடுப்பதில்லை. அவர் மந்திரிகளின் அங்கீகாரத்துடனே முடிவுகளை எடுப்பார். ரஷ்ய ஜனாதிபதி ஸ்டாலின், அமெ ரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆகியோர் தமது நாடு எதிர்நோக்கிய பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார்கள். அதேபோல இலங்கை ஜனாதிபதி 30 வருடங்களாக இலங்கையில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் தென் மாநிலங்களில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களைத் தீர்த்தார்.

**பாராளுமன்றத்தின் கௌரவம் பாதிக்கப்படும்**

ஜனாதிபதி முறையிலுள்ள நாடுகளில் பாரா ளுமன்றத்தின் கௌரவம் பல விதத்திலும் பாதிக் கப்படுகின்றது. பிரித்தானிய பாராளுமன்றத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்புடைய பிரதமரும் மந்திரிகளும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக் கின்றனர். இதனால் பாராளுமன்றத்திற்கு முழு மையாகக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளது. ஆனால், இலங்கையின் நிருவாகம் ஜனாதிபதி யின் பொறுப்பிலேயே உள்ளது. ஆனால், ஜனாதி பதியைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பாராளுமன் றத்திற்கு இல்லை. மேலும் ஜனாதிபதி ஒரு சட் டத்தை மக்கள் தீர்ப்புக்கு விட்டு சட்டமாக்கும் வல்லமையைப் பெற்றுள்ளார். இதன்படி ஒரு தீர்மானம் பாராளுமன்றத்திற்கு வராமலே சட்டமாக முடியும். இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 1982இல் மக்கள் தீர்ப்பை நடத்தி ஒரு தீர்மானத்தை சட்டமாக்கி னார். இவ்வாறு ஜனாதிபதி முறையால் பாரா ளுமன்றத்தின் கௌரவம் பாதிக்கப்படுகின்றது.



பீ.எம்.எப். சஹ்றா (158)
எப்.முஹம்மத்–எஸ். அஸீமா
உடபிடிய அல்ஹுஸ்னா ம.வி,
பள்ளேகம, தெல்தோட்டை



எம்.என்.எப். நுஸ்லா (155)
முஹம்மட் நிஸ்தார்–
எம்.ஜி.எஸ். காமிலா



எம்.எப்.எம். மின்ஸா (173)
எம். பஸீல்–சர்மிளா
க/குருக்குத்தலை மு.ம.வி,
கடுகண்ணாவ



எம்.ஏ.எப். அஸ்ரின் (179)
எம். அறபா–உம்முல்
ஹினாயா
பொ/ பொலன்னறுவை மு.ம.க



எம். அறபாத் (184)
சாக்கீர் உசைன்–நஜினா
கமு/ அல்மதீனா ம.வி,
நிந்தவூர்




ஏ.எப்.எம். சர்ராப் (163)
அப்துல் பாரி–எஸ். நோனா பீபீ
உடபிடிய அல்ஹுஸ்னா ம.வி,
பள்ளேகம, தெல்தோட்டை



எம்.ஏ.எப். நஸீஹா (164)
டி.எம். அதீக்–சித்தி நலூபா
க/இக்ரா மு.ம.வி,
உலப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Sister Rumman

# How much do you know?

Assalamu alaikum dear friends,

We meet in the end of this year,

Here is my 'year end' message,

"Learn from your past mistakes, not to repeat them, plan for the future and wait till you win!"



December....! The name itself brings joy to most of us.

A long vacation indeed!

Remember, don't waste your time.


As students, we should keep studying.

"Can't even imagine of studying in the vacation! " I hear some of you cry.

Ok. We'll show you the way. The best thing you could do is , practicing the past question papers.

Now for English, Let's go into some activities.

## Activity 01



**Fill in the blanks with the correct form of verb**

1. I _______(be) a very good Muslim
2. I _______ (pray) 5 times a day.
3. Last Ramadan, I ________ (fast) all 30 days.
4. Prophet Muhammed PBUH _________ (be) my role model.
5. I _________ (work) for my society in the future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Activity 02

### Write the correct plural form

| Singular | Plural |
|---|---|
| Flower | |
| Ox | |
| Mouse | |
| Louse | |
| Man | |
| Tree | |

**Answers**

**01.** 1. Am, 2. Pray 3. Fasted, 4.Is 5.Will work

**02.** To get the answers for Activity 02, let's learn the types of nouns.

Nouns can be divided into two, as follows.
Countable Nouns and Uncountable Nouns

| Countable Nouns | Uncountable Nouns |
|---|---|
| Flower, stone, rock, mountain, elephant, doll, baby, butterfly, test tube | Energy, power, Blood, rice, |

COUNTABLE NOUNS have singular and plural forms, whereas UNCOUNTABLE NOUNS don't have.

Uncountable nouns are neither singular, nor plural.

Ex: Energy, power, blood, rice, (we CANNOT say- energies, powers, bloods or rices- **X** )

Now the answers

| Singular | Plural |
|---|---|
| Flower | Flowers |
| Ox | Oxen |
| Mouse | Mice |
| Louse | Lice |
| Man | Men |
| Tree | Trees |

**" I have 5 pretty dolls" ✓**

**" Rice is our staple food" ✓**

**" Rices are eaten by Asians." X**

Friends, we notice you are improving every month, making great contributions to the English page. We appreciate this, and the English team has decided to give more chances to you readers. Yes! You are getting more place here. Enjoy the offer, and keep sending your works.

-Sister Rumman-

### Special facts for your knowledge

1. Which vitamin helps in the absorption of calcium? Vitamin D
2. The most common communicable disease? Influenza (cold)
3. Which indoor sports is the most popular in us? Basket ball
4. Which is the smallest ocean in the world? Artic ocean
5. Which is the country where reggs music originated? Jamaica
6. What is the rhino's horn made of? Hair
7. Which part of our body is affected by the disease diphtheria? Throat

**M.N.F.Shahina Burah**
**9E, Ku/Hizbullah C.C, Theliyagonne**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## How to stay Healthy




You have only one body. So it is very important to look after it. Here is some advice to help you stay healthy. Eat healthy food. For example you can eat fruits and vegetables three times a day. Fruits and vegetables make our teeth strong. They don't have a lot of fat. Don't eat a lot of sweets. Sweets like cakes contain lot of sugar. Sugar is bad for your health.

Junk food, such as Hamburgers, chips and shawarma, are unhealthy. They have a lot of oil. This can make you fat. Be careful about drinks. Fizzy drinks also have lot of sugar, which is bad for your teeth. Fruit juices and milk are healthy drinks. But avoid sugar on fruit juices. Do exercise every day. Walking is a very good exercise. Of course, sports are very good for you.

**A.S.F.Amra, Welamboda.**

## Amazing Facts


- 40,000 Americans are injured by toilet each year.
- Dinosaurs didn't eat grass? There were no grasses in the days of Dinosaurs.
- A snail can sleep for 3 days.
- Earth weighs 5,972,000,000,000,000,000,000 tons.
- Queen ants can live to be 30 years old.
- You can't kill yourself by holding your breath.
- Some worms will eat themselves if they can't find any food.
- Cockroaches break wind every 15 minutes.
- 259,200 people die everyday.

**Nuzha Nawshad**
**9E, Hizbullah Central College, Kurunegala**

## Cleanliness

Everyday have a bath
Twice a day brush your teeth
Once a week trim your nails
Wash the hands before your meals

If you want to pray to Allah daily
And if you want to pray Allah daily
You have to keep your self clean
And you would be rewarded from Him



If you want to make you lean,
Towards Jannah as a mu'meen
You have to keep you clean
Then pray to Rabbul Alameen

**Fasra Lisan**
**9G, Naleem Hajiar L.C**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at
HOW MUCH DO YOU KNOW?

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரத்தின் வினா-விடைப் போட்டி-II

**முதலாம் பரிசு**
வை. பாத்திமா சிபா, அக்கரைப்பற்று

**வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.**

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, டிஸம்பர் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

## வினாக்கள்

1. சுல்தான் ஸலாஹுத்தீனால் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவமனை எது?
2. விஞ்ஞானி இப்னு நபீஸ் எங்கே, எப்போது பிறந்தார்?
3. முஹர்ரம் என்பதன் பொருள் என்ன?
4. நீரில் செல்லும்போது ஆமைகளின் வேகம் என்ன?
5. உலகில் மிகப் பெரிய ஆமை வகை எது?
6. ஐ.நா.வின் உத்தியோகபூர்வ மொழியாக அரபு மொழி அங்கீகரிக்கப்பட்டது எப்போது?
7. டாக்டர் அப்துல் கலாம் அறிவுக்குக் கொடுக்கும் வரைவிலக்கணம் என்ன?
8. ஊடகங்கள் தொடர்பான உளவியல் கோளாறு ஒன்றைக் குறிப்பிடுக.
9. யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
10. புதிய ஏழு உலக அதிசயங்கள் பெயரிடப்பட்ட தினம் எது?

## பரிசுக்குரியவர்கள்:

பாத்திமா நஸ்ரின், பலாங்கொட
எம்.எம்.எம். பாரூஸ், பன்னல
எம்.என்.எம். நிப்ராஸ், தெல்தோட்டை
எம்.எப்.எம். பஸீஹா, பேருவளை
ஏ.சி.எப். அஸ்லி, விஜிதபுர
எம்.ஐ.எம். மஹ்பூபா, ஏறாவூர்
ஏ.எம். இல்மியா, இறக்காமம்
ஏ.ஏ.எஸ். ஆயிஷா ஹயாம், அக்கரைப்பற்று
எம்.ஜே.எம். பஸீர், ஓட்டமாவடி
எம்.எச்.எம். மப்ராஸ், பன்னல

# மனதுடன் உரையாடுதல்

இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இறையடியார் சுப்ஹுத் தொழுகையை நிறைவேற்றிய பின் சிறிது நேரம் தன் மனதோடு உரையாட வேண்டும்; மனதிற்கு சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும். பின்னர் மனதிடம் சொல்ல வேண்டும்: "மனமே! என்னிடம் இருக்கின்ற ஒரே முதலீடு வாழ்க்கைதான். நான் இந்த முதலீட்டை இழந்துவிட்டால் எனது வியாபாரம் நஷ்டமடைந்து விடும். இன்றைய நாள் புதிய நாளாகும். இந்த நாளை எனக்களித்த இறைவன் என்னுடைய தவணையை நீடித்திருக்கின்றான்; எனது மரணத்தைப் பிற்போட்டு எனக்கு நன்மை புரிந்துள்ளான். அவன் என்னை இந்த உலகத்திலிருந்து எடுத்திருந்தால்கூட நான் அவனிடம் இன்னும் சிறிது காலம் எனக்கு அவகாசம் தருவாயாக எனப் பிரார்த்தித்திருப்பேன்.

எனவே, மனமே! நீ மரணித்துவிட்ட பின் உனக்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டதாக எண்ணிக் கொண்டு இந்த நாளை வீணாக்குவதைத் தவிர்த்துக் கொள். இரவு பகலாக உனக்கு 24 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருப்பதாக எண்ணிக் கொள். இந்த 24 மணித்தியாலங்களும் 24 பகுதிகளாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதாக எண்ணிக் கொள். மறுமையில் இந்த ஒவ்வொரு பகுதியிலும் நீ செய்த நன்மைகளை இறைவன் கண்டுகொள்வான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய அரசில் மனித உரிமைகள்

ஏ.டபிள்யு. முஹம்மட்
சிராஜ் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி

**1. உயிர் மற்றும் உடைமைப் பாதுகாப்பு**

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின்போது கூறினார்கள்: "(இறைவனை நீங்கள் சந்திக்கும் இறுதித் தீர்ப்பு நாள்வரை) ஒருவர் மற்றவரின் உடைமையை, உயிரைப் பறிக்கக் கூடாது."

முஸ்லிம் நாட்டில் வாழும் முஸ்லிமல்லாத குடிமக்களின் உரிமைகளைக் குறித்து முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு திம்மியை (முஸ்லிமல்லாத குடிமகனை) கொலை செய்பவன் சுவனத்தின் வாடையைக் கூட நுகர முடியாது."

**2. மனித மாண்பின் பாதுகாப்பு**

அல்குர்ஆனில் இது தொடர்பாக பல போதனைகள் காணப்படுகின்றன.

i. ஒருவரையொருவர் பரிகாசம் புரியாதீர்கள்.

ii. அவதூறு கற்பிக்காதீர்கள்.

iii. பட்டப் பெயர் சூட்டி இழிவுபடுத்தாதீர்கள்.

iv. புறம் கூறாதீர்கள்; தரக் குறைவாக பேசாதீர்கள்.

**3. தனி நபர் வாழ்வும் புனிதமும்**

i. உளவு பார்க்காதீர்கள்.

ii. உரியவரின் அனுமதியின்றி ஒருவரின் வீட்டுக்குள் நுழையாதீர்கள்.

**4. தனி நபர் சுதந்திரம்**

எந்தவொரு மனிதனின் குற்றமும் பகிரங்கமாக நீதிமன்றத்தில் நிரூபணமாகாத வரை அவரை சிறையிலடைக்கக் கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் ஒருவரை சிறையிலடைக்கக் கூடாது. நீதிமன்றத்தில் ஒருவரைப் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பளிக்காமல் சிறையிலடைக்க இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

**5. கொடுங்கோன்மைக்கு எதிரான பாதுகாப்பு**

இஸ்லாம் வழங்கிய மனித உரிமைகளில் ஒன்று, அரசின் கொடுங்கோன்மைக்கு எதிரான பாதுகாப்பாகும்.

இஸ்லாத்தில் அனைத்து அதிகாரங்களும் இறைவனுக்கே உரியவை. மனிதனுக்கு வழங்கப்பட்டதெல்லாம் பிரதிநிதிக்குரிய அதிகாரமே. அடைக்கலமாக அளிக்கப்பட்ட அதிகாரமே ஆகும்.

இத்தகைய அதிகாரங்களைப் பெற்றவர், மக்களின் முன் தூய்மையானவராக அப்பழுக்கற்றவராக காட்சியளிக்க வேண்டும். அந்த மக்களின் நன்மையை ஒட்டியே அதிகாரம் பயன்பட வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தி அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கலீபாவாகப் பொறுப்பேற்ற போது மக்களை நோக்கிக் கூறினார்;

"நான் நல்லது செய்தால் என்னோடு ஒத்துழையுங்கள்; நான் தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள், இறைவனின், இறைத்தூதரின் ஆணைகளை நான் நிறைவேற்றும் வரை எனக்குக் கீழ்ப்படியுங்கள். நான் வழிதவறி நடந்தால் எனக்கு கீழ்ப்படிய வேண்டாம்."

**6. கருத்துச் சுதந்திரம்**

குடிமக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு இஸ்லாம் முழு உத்தரவாதமளிக்கிறது. ஒழுக்க மேம்பாட்டிற்கு துணையாக அது அமைய வேண்டும். அதனால் கொடுங்கோன்மை மற்றும் தீங்கு அதிகரிக்கலாகாது.

சுதந்திரம் பற்றி மேலை நாட்டினர் கொண்டுள்ள கருத்தோட்டத்தை விட இஸ்லாம் அளித்துள்ள கருத்துச் சுதந்திரம் சிறப்பானது. எந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தாலும் தீமைகள், அநியாயங்கள் பெருகுவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. விமர்சனம் என்ற பெயரில் பழி, தாக்குதல், அத்துமீறல்களை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இறை கட்டளை ஏதேனும் உள்ளதா என்று ஸஹாபாக்கள் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வினவுவார்கள். அப்படி இறைக் கட்டளை எதுவும் வெளியாகவில்லை என்று நபிகளார் கூறினால், அவர்கள் வெளிப்படையாக மனம்விட்டு தத்தமது கருத்துக்களைக் கூறுவார்கள்.

**7. கூடி வாழும் உரிமை**

மனிதர்கள் கூடி சமூகமாக வாழ்வதற்கும் கூட்டம் கூடுவதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**8. தீர்மானிக்கும் உரிமை**

"இறை மார்க்கத்தில் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை" என்று அல்குர்ஆன் கூறுகிறது.

சர்வதிகார சமூக அமைப்பில் தனிநபர் உரிமை என்பதே இல்லை. அரசிற்கு அளிக்கப்படும் வரையரையற்ற அதிகாரங்கள், மனித அடிமைத்தனத்தை உண்டாக்கும். ஒரு காலத்தில் மனிதன் மீது முழு அதிகாரம் செலுத்தும் அடிமை முறை உலகில் அமுலில் இருந்தது. இப்பொழுது அத்தகைய அடிமை முறை ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் அடிமைத்துவத்திற்குச் சமமான தனிநபர் கட்டுப்பாடுகளை சர்வதிகார சமூக அமைப்பு விதித்துள்ளதை நாம் கண்கூடாகவே பார்க்கலாம்.

**9. மத சுதந்திரம்**

சுய தீர்மான உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அதே நேரத்தில் தனி நபரின் சமய உணர்வுகளுக்கு உரிய மதிப்பளிக்கவும் தவறவில்லை. சமய விவகாரத்தில் ஒருவரின் உரிமையை ஆக்கிரமிக்கும் வகையில் அமையும் எந்தச் செயலும் கூடாது என இஸ்லாம் அறிவுறுத்துகிறது.

**10. தவறான தண்டனையிலிருந்து பாதுகாப்பு**

வேறொருவர் செய்த குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்படுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

**11. வாழும் உரிமை**

தேவையுள்ளோருக்கும் வறியோருக்கும் உரிய உரிமைகளை இஸ்லாம் வழங்குகிறது. அவர்களுக்கு உரிய நியாயமான தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

**12. சட்டத்தின் முன் அனைவரும் சமம்**

சட்டத்தின் பார்வையில் அனைத்து குடிமக்களுக்கும் பரிபூரண, முழுமையான உரிமையை இஸ்லாம் வழங்குகிறது.

ஓர் உயர் குலப்பெண் திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டாள். அந்த வழக்கு முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முன் கொண்டு வரப்பட்டது. திருட்டுக் குற்றத்திலிருந்து அவளை விடுவிக்க வேண்டும்; தண்டிக்கக் கூடாது என்று சிலர் பரிந்துரை செய்தனர். அப்பொழுது நபியவர்கள் கூறினார்கள்: இதற்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர், சாமானியர்கள் தவறு செய்தால் தண்டிப்பார்கள். உயர் குடிமக்கள் அதே தவறைச் செய்தால் தப்பிக்க விடுவார்கள். என் ஆத்மா யார் கைவசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக, முஹம்மதின் மகள் பாத்திமா இதே தவறைச் செய்தாலும் நான் அவர் கையைத் துண்டிக்காமல் விடமாட்டேன்.

**14. அரசின் விவகாரங்களில் கலந்து கொள்ளும் உரிமை**

*"அவர்கள் பணிகள் அவர்களுக்குள் கலந்தாலோசனை மூலமாகவே (நடைபெறும்)" (42: 38)*

அரசின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மனிதனின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு மேற்கூறிய மனித உரிமைகளை இஸ்லாம் வழங்கியுள்ளது. அதுமட்டுமல்ல, மிருக இயல்புகளை விட்டு வெளியேறி, மனித மாண்புகளை மேற்கொள்ள வேண்டும்; இரத்த பந்தம், இன மேன்மை, மொழி வெறி, பொருளாதாரம், மேலுரிமை போன்ற குறுகிய வட்டங்களை விட்டும் பரந்த நோக்கின்பால் வர வேண்டும்; உள சுத்தியோடு சர்வதேச சகோதரத்துவத்தை நிறுவி வாழ வேண்டும் என இஸ்லாம் மனித குலத்திற்கு அறைகூவல் விடுத்து அழைக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்ல முடியாததை வெல்வது எப்படி?

-டாக்டர் அப்துல் கலாம்-



*மாணவர்களே!* உங்களுடன் நான் அறிவு தொடர்பான சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அறிவுதான் உங்களை மிகப் பெரியவர்களாக மாற்றும். அறிவுதான் 'வெல்ல முடியாதது' என்று கருதப்படுவதை வெல்லக் கூடியது. இந்த அறிவு நான்கு அம்சங்களைக் கொண்டது.

1. கற்பனைத் திறன்
2. நேர்மை
3. துணிவு
4. வெல்ல முடியாத சக்தி

இந்த நான்கும் ஒன்று சேர்ந்த குணங்களைக் கொண்டவர்கள் அறிவில் சிறந்த குடிமக்களாகத் திகழ்வார்கள்.

**1. கற்பனைத் திறன்**

கற்றல் தருவது கற்பனைத் திறன்; கற்பனைத் திறன் தூண்டுவது சிந்தனையை; சிந்தனை அளிப்பது அறிவு; அறிவு உங்களை மிகச் சிறந்தவராக்கும்.

**2. நேர்மை**

நேர்மையின் தெய்வீக அம்சங்கள் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். அவை:

நீதி, நேர்மை குடியிருக்கும் இதயங்களின் நடத்தையில் அழகு மிளிர்கிறது; நடத்தையில் அழகு மிளிரும் இல்லங்களில் நல்லிணக்கம் மலர்கிறது; நல்லிணக்கம் மலர்கின்ற இல்லங்கள் நிறைந்த தேசத்தில் ஒழுங்கு நிலவுகிறது; ஒழுங்கு நிலவுகின்ற தேசங்கள் நிறைந்த உலகத்தில் அமைதி தவழ்கிறது.

இதயம், நடத்தை, தேசம் மற்றும் உலகம் ஆகிய நான்கிற்கும் ஓர் அழகான இணைப்பு, தொடர்பு உள்ளது. ஒரு நாட்டில் உள்ள அனைவருக்கும் நேர்மை பொதுவானதாக இருக்க வேண்டும். குடும்பத்தில், கல்வியில், சேவையில், தொழிலில் மற்றும் வர்த்தகத்தில் நேர்மை இருக்க வேண்டும்.

நிர்வாகம், அரசியல், அரசு, நீதித்துறை ஆகிய அனைத்திலும் நேர்மை நிலைகொண்டு இருக்க வேண்டும். வெல்ல முடியாத ஒரு சக்தியை அளிக்கவல்ல இந்த நேர்மைதான் இந்தியா வளர்ந்த நாடாக மாறுவதற்கான வல்லமையை அளிக்கும்.

**3. துணிவு**

துணிவு பற்றியும் நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

- வித்தியாசமாக சிந்திக்கும் துணிவு
- கண்டுபிடிக்கும் துணிவு
- இதுவரை யாரும் செல்லாத பாதையில் செல்லும் துணிவு
- முடியாதது எது என்பதை அறியும் துணிவு
- சிக்கல்களைத் தீர்க்கும் துணிவு

இவையே இளைஞர்களின் உயிர் மூச்சாக இருக்க வேண்டும்; அவர்கள் வெற்றி பெற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் முதல் குறிக்கோள் அவர்கள் தங்கள் படிப்பில் சிறந்து விளங்குபவர்களாக இருக்க வேண்டும். நாட்டுக்கான அவர்களது முதல் சேவை இதுதான்.

படிக்கும் காலத்தில் கேள்வி கேட்கும் தன்மை, கற்பனை வளம், தொழில்நுட்ப அறிவு, தொழில்முனையும் திறன் மற்றும் அறவழியிலான தலைமைப் பண்பு ஆகியன அவரிடத்தே உருவாகியிருக்க வேண்டும். இவை ஐந்தையும் பெற்ற ஒரு மாணவர் தன்னிச்சையாக கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மாணவராக வளர்ந்து நிற்பார்.

தன்னைத் தானே இயக்கிக் கொள்ளக்கூடிய, தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடிய கற்றுக் கொள்பவராக அவர் உருவாகுவார். அதிகாரம் பெற்றவரை மதிக்கத் தெரிந்தவராக அவரிடம் முறைப்படி கேள்வி கேட்கத் தெரிந்தவராக இருப்பார். இவர்களைப் போன்றவர்கள் சேர்ந்துதான் வளமான இந்தியாவை உருவாக்க முடியும்.

இளம் மாணவர்களுக்கு சிறந்த புத்தகங்கள் தான் சரியான பாதையில் அவர்களை இட்டு செல்லும். ஐன்ஸ்டீன் வாழ்க்கையில் அவர் தந்தை வாங்கித் தந்த 'கொம்பாஸ்' தான் அவரை சிந்திக்க தூண்டியிருக்கிறது. அவரது 12 வயதில் பரிசளிக்கப்பட்ட புத்தகம்தான் அவருக்கு இரண்டாவது அற்புதமாக விளங்கியது. பெரிய ஆய்வுகூடமோ அதிக செலவு பிடிக்கும் கருவிகளோ இன்றி, இந்த பிரபஞ்சத்தின் உண்மைகளை தனது கணித அறிவால் கண்டறிந்தார்.

**4. வெல்ல முடியாத சக்தி**

வெல்ல முடியாத சக்தி பற்றி சேர்.சி.வி. ராமன் தனது 82 வது வயதில் உரை நிகழ்த்தினார். அது இன்றும் என் ஞாபகத்தில் உள்ளது.

"என் முன்னே உள்ள இளைஞர்களே, பெண்களே!

நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் எப்போதும் நம்பிக்கையையும் துணிவையும் இழந்துவிடாதீர்கள். உங்கள் முன் உள்ள சவாலை துணிச்சலான ஈடுபாட்டின் மூலமாகத்தான் வெற்றி பெற முடியும் என்று என்னால் உறுதிபட சொல்ல முடியும். இந்தியர்களின் சிந்தனை ஜேர்மன், வட ஐரோப்பியர்களுக்கு கொஞ்சமும் குறைந்தது அல்ல. நம்மிடம் இல்லாதது துணிச்சல் மட்டும்தான்.

நம்மை இயக்கும் சக்தியை பெற நாம் தவறி விடுகிறோம். அது இருந்தால் நம்மை எங்கோ கொண்டு சென்றுவிடும். நமக்குள் ஒரு தாழ்வு மனப்பான்மை இருப்பதாகவே நான் கருதுகிறேன். இப்போது இந்தியாவுக்கு தேவைப்படுவதெல்லாம் நம்மை தோற்கடிக்கும் இந்த சக்திகளை அழிப்பதுதான். நமக்கு வெற்றிக்கான சக்தி வேண்டும்.

நம்மை சரியான இடத்துக்கு எடுத்து செல்கின்ற பாதை தேர்வு செய்கின்ற சக்தி வேண்டும். இந்த பூமியில் மிகச் சிறந்த இடத்தை பெறக்கூடிய பெருமைமிகு நாகரிகத்தை சேர்ந்தவர்கள் என்று அங்கீகரிக்கும் சக்தி தேவை. இந்த வெல்ல முடியாத சக்திகளே நம்மை சரியான பாதைக்கு அழைத்து செல்லும்" என்றார் ராமன்.

எனவே நண்பர்களே! அறிவு என்பது,

அறிவு = கற்பனைத் திறன் + நேர்மை + துணிச்சல் + வெல்ல முடியாத சக்தி

மாணவப் பருவத்திலேயே இந்த குணாதிசயங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் கல்வியாளர்களும் உண்மையான அறிவு மாணவர்களை சென்றடைய வேண்டும் என்று விரும்ப வேண்டும்.

மீண்டும் சந்திப்போம். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்!

நன்றி: தினத்தந்தி

**புலமைப் பரிசில் பரீட்சை சித்தி 2011**



க/தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி 2011ல் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று எம்.என்.எப். நிப்லா சித்தியடைந்துள்ளார். இவர் தெல்தோட்டை மெதகெகிலயைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். நௌபர்-மஸாஹிரா தம்பதியரின் புதல்வியாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

திருமதி என்.எஸ். நஸ்ரா நிஸாம்தீன்
B.A.(Hons) PGDE

## நளவெண்பா

மாணவர்களே!

'நளனுக்கே மாலையிட்டாள் மங்கை' என்று சுயம்வர காண்டத்தில் தமயந்தி எனும் மங்கை, மனம் தழுவிய நளன் எனும் காளையை மணம் தழுவ வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறி கரம் தழுவல் நிகழ்வு உங்கள் பாடப்பரப்பில் சில பாடல்களில் உங்களுக்கான கற்றல் பகுதியாக தரப்பட்டுள்ளமை நீங்களறிந்த விடயம்.

அத்துடன், பாடல்களை சந்தி பிரித்து, அரும் பத விளக்கத்துடன் பொழிப்புரையை கற்பதும் சில சிறிய, பெரிய வினாக்களுக்கு பாடல் கூறும் செய்திகளினூடாக விடையளிக்கவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டுமென்பதால் இப்பகுதியைத் தருகிறோம்.

### வினாக்களும் விடைகளும்

01. நளவெண்பாவைப் பாடிய 'புகழேந்திப் புலவர்' சிறப்பாக இந்நூலைப் படைத்திருக்கிறாரா?

⇨ ஆம். நளவெண்பா சுயம்வர காண்டமே அவர் படைப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. தமயந்தியின் சுயம்வர நிகழ்வு, மண்ணுலகத்தார் விண்ணுலகத்தார் இந் நிகழ்வில் பேர்விருப்பத்துடன் கலந்து கொள்ளல், தமயந்தி-நளன் காதலுணர்வு, தேவர்களின் சூழ்ச்சி, தமயந்தி தன் மதி நுட்பத்தால் நளனுக்கு மாலை சூடல் என்றவாறு அழகிய சொல்லோவியமாக கதையை நகர்த்தியிருக்கிறார் புகழேந்திப் புலவர்.

02. நளவெண்பா எவர்களுடைய கதையைக் கூறுகிறது?

⇨ நளன், தமயந்தி

03. தமயந்தியின் சுயம்வரத்துக்கு வந்திருந்தோர் யாவர்?

⇨ இவ்வுலக அரசர்கள், தேவர்கள்

04. நளனை தமயந்தி கண்டறிந்த முறையினை விளக்குக.

⇨ சுயம்வர மண்டபத்தில் நளனுருவில் தேவர்களும் வந்திருக்க தடுமாறிய தமயந்தி விதிக் கடவுளை வேண்டிக் கொண்டாள். அத்துடன், கண்ணிமைக்காமை, கால் நிலத்தில் பதியாமை, மலர் மாலை வாடாமை போன்ற இயல்புகள் கொண்டவர்கள் தேவர்கள் என்பதை மனதிலே நிறுத்தி தன் புத்திக்கூர்மையால் நளனை தமயந்தி இனங்கண்டு மாலையிட்டாள்.

05. தமயந்தியின் அழகும் நுண்ணறிவும் நள வெண்பாவில் விளக்குமாற்றை துலக்குக.

⇨ "பூவரைந்த மாசிலாப் பூங்குழலாள்" தமயந்தி மென்மையான இயல்புடையவள். அன்னம் கூறிய நளனை கரம்பற்ற உறுதி பூண்டவள். தெய்வ ஆசி பெறத் துடிப்பவள். நளனுருவில் தேவர்களிருந்த போதும்கூட விதிக்கடவுளை மனதில் எண்ணிக் கொண்டவள். மதிநுட்ப மிக்கவள். செந்தாமரை வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள். பொன்னால் செய்த வளையல்கள் அணிந்த வேல் போன்ற அழகும் கூர்மையுமான கண்களையுடைய அழகின் முழு வடிவம் தமயந்தி என்றவாறெல்லாம் தமயந்தி புகழப்படும் அதேவேளை, அவளது அழகில் மயங்கி தேவர்கள் நளனுருவில் வந்ததாகக் கூறப்படுவதும் அணிந்த ஆபரணங்களுக்கு தன்னுடைய அழகையே தமயந்தி பரிசளித்ததாகக் கூறப்படுவதும் தமயந்தி எனும் மங்கையின் சிறப்பினைச் சித்திரிப்பதாகத் துலங்குகிறது.

06. தமயந்தியின் சிறப்பினைக் கூறும் பாடல் வரிகளைத் தருக.

⇨ "பூவரைந்த மாசிலாப் பூங்குழலாள்..." (பூக்களை அணிந்த, குற்றமற்ற அழகுடைய கூந்தலையுடையவள்)

⇨ "பூணுக்கழகளிக்கும் பொற்றொடி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தான் அணிந்ததனாலேயே தன் அழகினை அணிகளுக்குத் தந்தவள்)

- "நறுந்தா மரை விரும்பும் தன்னுதலே அன்னாள்" (மணம் வீசும் செந்தாமரை மலரை விரும்பி அதில் உறைகின்ற திருமகளைப் போன்ற அழகுடையவள் தமயந்தி)
- "வேற்கண்ணாள்..." (வேல் போன்ற நீண்ட அழகிய விழிகளையுடையவள்)
- "மெல்லியலாள்..." (மென்மையான அழகுடையவள்)

(குறிப்பு: மாணவர்கள் இவ்வரிகளை மனனம் செய்து கொள்ளல் அவசியம். ஏனெனில், தமயந்தியின் சிறப்பு தொடர்பான கேள்விக்கு இவ்வாறான பாடல் வரிகள் எதிர்பார்க்கப்படும்.)

07. பின்வரும் வரியின் சிறப்புகளை விளக்குக.

"செந்தாமரை முகம் போய் வெண்டாமரையாய் வெளுத்தவே..."

நளனுக்கு தமயந்தி மாலை சூட்டியதும், தமயந்தியின் சுயம்வர மாலையை பெற எதிர்பார்த்திருந்த தேவர்கள், மன்னர்கள் ஏமாற்றம் அடைந்ததாக புலவர் கூறவருகையில், செந்நிறமான செந்தாமரை வெண்ணிறமாக மாறியதென அழகிய கவித்துவத்துடன் எடுத்துக் காட்டுகிறார்.

அதாவது, நளனை இனங்கண்டு தமயந்தி மாலை சூடியதும் அதைக் கண்ட செந்தாமரை போன்ற மன்னர்களின் சிவந்த முகம் வெட்கத்தால், ஏமாற்றத்தால் வெறுப்பு அடைந்துவிட்டதாக கவிஞர் காட்டுகிறார். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது போல அருமையான உவமை மூலம் மன்னர்களின் நிலைப்பாட்டை புகழேந்தி புலப்படுத்தியிருக்கிறார். நயமும் சுவையும் கொண்ட இவ்வரிகள் முரண் அணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றன.

08. "செம்மைசேர் கன்னியானாகிற் கடிமாலை" என்ற தொடரில் இடம்பெறும் உரிச்சொல்லைத் தருக.

'கடிமாலையில்' வந்த 'கடி' என்பதே உரிச்சொல்.

09. பின்வரும் செய்யுளின் பொருளை உங்கள் மொழிநடையில் எழுதுக. அதில் நீர் காணும் சிறப்புக்களை விளக்குக.

விண்ணரசரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர- மன்ரைசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

பொழிப்புரை: (நளனை இனங்கண்டவுடன்) திருமகளைப் போன்ற அழகிய தமயந்தியானவள் வெற்றி வேந்தனாகிய நளனுக்கே தன் அழகிய திருமண மாலையை சூட்டினாள். அதைக் கண்டதும் தேவலோகத்தில் இருந்து வந்த இந்திரன், வருணன், அக்கினி, இமயன் ஆகிய நான்கு தேவர்களும் வெட்கமடைந்தனர். பெரிய இம்மண்ணுலக மக்கள் மகிழ்வடைந்தனர். இவ்வுலகத்தையாளும் அரசர் அனைவரும் தம் நெஞ்சில் மிக்க மயக்கமடைந்தனர்.

காணத்தகு சிறப்பு: தமயந்தியை மணம் முடிக்க விண்ணுலகத்தார் வந்திருந்தபோதும், அவர்கள் நளனுருவிலிருந்தபோதும் அவர்களை இனங்கண்டு தன் மதிநுட்பத்தால் நளனுக்கே தமயந்தி மாலையிட்டாள். இதைக் கண்டதும் தேவர்கள் தம் எண்ணம் கைக்கூடாது போனதை எண்ணி வெட்கமும் துக்கமுமடைய, மன்னர்களும் "மண் அரசர் வன்மாலை தன் மனத்தே சூட" துயரத்தில் திளைத்தனர் என்கிறார் புலவர். அத்துடன் தமயந்தி எனும் அழகிக்கும் நளன் எனும் மகாராசனுக்கும் திருமணம் நடந்துவிட்டதென மண்ணுலக மக்கள் மகிழ்ச்சியில் திகழ்வதாகவும் அழகாகக் காட்டுகிறார் கவிஞர்.

10. உவமை விளக்கம் தருக

i. 'மல்லல் மறுகில் மட நா குடனாகச் செல்லும் மழவிடை போல் செம்மாந்து...

- உவமானம்- மழவிடை (இளமை பொருந்திய காளை)
- உவமேயம் - நளன்
- பொதுத்தன்மை - இளமை

ii. "வேற்கண்ணாள்..."

- உவமானம்- வேல்
- உமமேயம்- கண்
- பொதுத்தன்மை- கூர்மை
- தமயந்தியின் கண் வேல் போன்றது என சிறப்பிக்கப்படுகிறது.
- மல்லல்... எனும் பாடல் வரியில் நளனின் சிறப்பு அதாவது இளமை பொருந்திய காளையாக நளனை சிறப்பிக்கிறார் புலவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் என்ற வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வை எவ்வாறு திட்டமிட்டார்கள் என்பதை நாம் நுணுக்கமாகப் பார்க்கின்றபோது, நாம் எமது வாழ்வை எவ்வாறு நுணுக்கமாகவும் வியூகமாகவும் திட்டமிட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.**

## திருப்புமுனையைத் திட்டமிடல்;

# ஹிஜ்ரத் கற்றுத் தரும் பாடம்

ஜே.எம். அஸீம் (நளீமி)

**உலகில்** உயர்ச்சியடைந்தவர்களின் வாழ்வில் பல்வேறு நிகழ்வுகள் திருப்புமுனைகளாக அமைந்திருக்கும். அந்த நிகழ்வுகளின் பின்னர் அவர்களின் வாழ்க்கைப் போக்கே மாறிவிடும். உதாரணமாக 2012 ஒலிம்பிக் நெருங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் சென்ற ஒலிம்பிக் கதாநாயகன் உசைன் போல்ட்டைக் குறிப்பிடலாம். அவர் அவரது பதின்ம பருவத்தில் தடகளப் போட்டியில் சாதனை படைக்க வேண்டும் என்று வளர்ந்தவரல்ல. கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் போன்றவற்றில் ஆர்வமாக ஈடுபட்டவர். பின்னர் அவரது பயிற்றுவிப்பாளர் அவரது ஓடும் திறமையைப் பார்த்து தடகளப் போட்டிகளில் பங்குபற்றுமாறு ஆர்வமூட்டினார். அவரும் முயற்சித்தார்; வென்றார். அவரது பயிற்றுவிப்பாளர் அவருக்கு தடகளப் போட்டிக் களத்தை காட்டிக் கொடுத்த தருணம்தான் அவரது வாழ்வில் திருப்புமுனை. அந்த திருப்புமுனையை அவர் திட்டமிட்ட முறைதான் சாதனை.

இஸ்லாமியப் புதுவருடத்தின் ஆரம்ப மாதமான முஹர்ரம் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இத்தருணத்தில் இஸ்லாமியப் புது வருடக் கணிப்பிற்கு பின்னணியாக இருந்த ஹிஜ்ரத் நிகழ்வையும் அதில் நாம் பெற வேண்டிய பாடங்களையும் படிப்பினைகளையும் நினைவுகூர்வது பொருத்தமாயிருக்கும் எனக் கருதுகின்றேன். அதில் பிரதானமானதுதான் நாம் குறிப்பிடும் வாழ்வின் திருப்புமுனையைத் திட்டமிடுவதாகும்.

இந்தவகையில்தான் க.பொ.த (சா.த) பரீட்சை எழுத உள்ள மாணவர்கள் தமது கல்வி வாழ்க்கையை மாத்திரமன்றி தமது எதிர்காலத்தையும் சேர்த்தே திட்டமிட வேண்டியுள்ளது. தாம் உயர்தரத்தில் என்ன கற்க வேண்டும் என்பது மாத்திரமல்லாமல், அதன் பின்னரான தமது கல்விப் பாதை என்ன? என்பதையும் திட்டமிட வேண்டும். தாம் என்னவாக வர வேண்டும் என்பது மாத்திரமல்லாமல் ஏன் அவ்வாறு வர வேண்டும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்கான பாதையை வரைந்து கொள்வதென்பது மாணவர்களால் சாத்தியப்படாது போகின்றபோது உரியவர்களிடம் ஆலோசனை பெற வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் என்ற வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வை எவ்வாறு திட்டமிட்டார்கள் என்பதை நாம் நுணுக்கமாகப் பார்க்கின்றபோது நாம் எமது வாழ்வை எவ்வாறு நுணுக்கமாகவும் வியூகமாகவும் திட்டமிட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

### 01. தயார்படுத்தல்

நாம் எந்தத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு முன்னரும் அதனைப் பற்றிய முன் திட்டமிடலைச் செய்ய வேண்டும். ஏனெனில் திட்டமிடல் என்பது எதிர்காலம் சார்ந்தது; எதிர்காலத்தில் நிகழ வேண்டிய விடயங்களையே நாம் திட்டமிட வேண்டும். எதிர்காலம் பற்றிய அறிவோ எமக்கில்லை; அனுமானம்தான் இருக்கிறது. எனவே, அதனை முடியுமானவரை மதிநுட்பத்துடன் அணுகி தயார்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் உயர்தரப் பரீட்சை என்பது எமக்குத் தெரியும். அதில் சித்தியடைந்து தகுதிபெற்றால் பல்கலைக்கழகம் நுழையலாம் என்றும் இல்லாவிட்டால் வேறு தொழிற்துறையைத் தேடலாம் என்பதும் எமக்குத் தெரியும். பல்கலைக்கழகம் சென்றால் எமது வாழ்க்கைப் பாதை எவ்வாறு விரியும் என்பதும் வேறு கற்கை நெறிகளையோ தொழிற்துறைகளையோ தெரிவு செய்தால் அந்தப் பாதை எப்படியிருக்கும் என்பதும் ஓரளவுக்கு நமக்குத் தெரியும்.

இவ்வாறு எமக்குத் தெரிந்த அறிவை வைத்துக் கொண்டு நாம் திட்டமிட வேண்டும். மேலும் உரியவர்களிடம் ஆலோசனை பெறவும் வேண்டும். நபியவர்கள் மதீனா செல்வதற்கு முன்னர் தான் ஏன் ஹிஜ்ரத் செய்ய வேண்டுமென்பதையும் எங்கு ஹிஜ்ரத் செய்ய வேண்டுமென்பதையும் எவ்வாறு, எப்போது ஹிஜ்ரத் செய்ய வேண்டுமென்பதையும் சிந்தித்துத் திட்டமிட்டார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதால் என்ன நன்மை கிடைக்கும், என்ன இழப்புக்கள் ஏற்படும் என்பதையெல்லாம் திட்டமிட்டார்கள்.

அதேவேளை, நபியவர்கள் உடனடியாக மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லவில்லை. மூன்று ஆண்டுகளாக மதீனாவில் இஸ்லாத்தைப் பரப்பி அதற்கான உத்தரவாதத்தைப் பெற்று தனது இலக்கை அடைய உதவுமா என ஆராய்ந்தறிந்த பின்னரே பயணித்தார்கள். அதேபோல் நாமும் எமது எதிர்கால வாழ்க்கை நிகழ்வுகள் எப்படியிருக்கும் அதற்கு எவ்வாறான ஏற்பாடுகளைச் செய்யலாம் போன்ற விடயங்களை திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும்.

## 2. தூரநோக்கு

திட்டமிடும்போது கவனம் செலுத்த வேண்டிய பிரதான விடயம்தான் தனது ஆரம்ப அடைவு முதல் இறுதிக் கனவு வரை அனைத்தையும் சரியாக அடையாளம் கண்டு தீர்மானிக்க வேண்டும். இது ஹிஜ்ரத் கற்றுத் தரும் பாடமாகும். ஹிஜ்ரத்திற்கான ஏற்பாடுகளை மூன்றாண்டுகள் மேற்கொண்ட நபிகளார் அதன் பின்னரான செயற்பாடுகளையும் ஒவ்வொன்றும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை தூர சிந்தனையுடன் அடையாளப்படுத்தினார்கள்.

ஹிஜ்ரத் போகின்றபோது எவ்வாறான ஏற்பாடுகள் செய்ய வேண்டும், எங்கே தங்குவது, எத்தனை நாட்கள், எந்தப் பாதையால் மதீனாவிற்குச் செல்வது, யாருடன் செல்வது, மதீனாவிற்குப் போய் செய்ய வேண்டியது என்ன, அதிலும் முதலில் செய்ய வேண்டியது என்ன, அதன் பின் செய்ய வேண்டியது என்ன என்பவற்றைத் திட்டமிட்டார்கள்.

நபிகளாரின் ஒவ்வொரு நகர்வும் இத்தகைய தூர நோக்கின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இதைப் போலவே நாமும் எமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். க.பொ.த (சா.த) பரீட்சையை நான் எனது அடுத்த கட்ட நகர்வுக்கு எந்தளவு சாதகமாக அமைத்துக் கொள்ள முடியும், பரீட்சையின் பின்னரான எனது அடுத்த நகர்வு என்ன, பரீட்சையின் பின்னர் கிடைக்கும் விடுமுறையை நான் எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்துவது, எனது உயர்தரத்திற்கு எவ்வாறு தயார் செய்வது, உயர்தரத்தில் எதனைத் தெரிவு செய்வது, அதன் பின்னரான செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என அனைத்தையும் தூர நோக்கின் அடிப்படையில் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும்.

## 3. வியூகத் திட்டமிடல் (Strategic Planning)

நாம் திட்டமிடல் என்ற சொல்லை சர்வ சாதாரணமாகக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் வியூகத் திட்டமிடல் அல்லது தந்திரோபாயத் திட்டமிடல் என்பதுதான் இன்றைய திட்டமிடலில் நவீன போக்கு ஆகும். யுத்த, இராணுவ நடவடிக்கைகளை சாதாரணமாக திட்டமிடல்களால் நுணுக்கமாகச் செய்ய முடியாது. எதிரிகளின் யுத்த தாக்குதல்களை முறியடிக்கவும் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தவும் சாதாரண திட்டமிடல் போதுமானதாக அமையாது. எனவே, இவ்வாறான கட்டங்களில் வியூகத் திட்டமிடலை மேற்கொள்வர்.

நாமும் சிக்கல்கள் நிறைந்த எமது எதிர்கால வாழ்வின் திட்டமிடல்களை மேற்கொள்ள வியூகத் திட்டமிடல் பயன்மிக்கதாகும். வியூகத் திட்டமிடல் என்பது ஒவ்வொரு விடயத்தையும் நுணுக்கமான முறையில் திட்டமிடுவதாகும். நபியவர்கள் ஹிஜ்ரத்தின்போது இத்தகைய வியூகத் திட்டமிடலைத்தான் மேற்கொண்டார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒவ்வொரு விடயத்தையும் எந்தளவு நுணுக்கமாகத் திட்டமிட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகப் பெரும் திட்டமிடல் வல்லுனர்கள்கூட ஆச்சரியமடைந்திருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. SWOT பகுப்பாய்வு

ஒரு விடயத்தை செய்வதில் எம்மிடமுள்ள பலம், பலவீனம் மற்றும் அதனை நிறைவேற்றுவதற்கு எமக்கு வெளியே உள்ள சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பனவற்றை அடையாளப்படுத்தி அறிந்திருக்க வேண்டும். நான் யார், என்னால் செய்ய முடியுமான எனது சக்திக்குட்பட்ட விடயங்கள் யாவை, முடியாதவை யாவை என்பவற்றை அறிந்திருப்பதே பலம், பலவீனம் என்பதினுள் அடங்கும். எமது பலவீனத்தை நாம் அறிந்திருப்பது எமக்கு பலம்; எமது பலவீனத்தை எதிரி அறிந்திருப்பது எமது எதிரிக்குப் பலமாக அமைந்து விடும்.

எமக்கு வெளியிலுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை சரியாக அடையாளப்படுத்துவது சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துவதற்கும் சவால்களை தெரிந்திருப்பது அவற்றை சமயோசிதமாக எதிர்கொள்வதற்கும் உதவும்.

நபியவர்கள் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக நடந்து கொண்டார்கள். இதனால் தன்னைப் பற்றி மிகை மதிப்பீடு செய்யவோ அல்லது குறைவாக எடைபோட்டு நம்பிக்கையிழக்கவோ செய்யாமல் திட்டமிடலைச் சரியாகச் செய்தார்கள். இவ்வாறே நாமும் சரியான மதிப்பீடு செய்வதன் மூலம் பல பிரச்சினைகளைத் தவிர்ந்து கொள்ளலாம்.

நாம் எம்மை மிகை மதிப்பீடு செய்து கொண்டு எம்மால் சுமக்க முடியாத பாரிய சுமைகள், பொறுப்புக்களைச் சுமக்க முயன்றால் 'மிகைச் சுமை நோய்' எம்மை ஆட்கொள்ளும். இதனால் எமது செயற்பாடுகள் பாதிக்கப்படும். மறு பக்கத்தில் நாம் தரக் குறைவாக மதிப்பீடு செய்தால் நம்பிக்கையிழந்து விடுவோம். நம்பிக்கையீனம் எமது செயற்பாடுகள் அனைத்தினதும் வினைத்திறனை இல்லாமற் செய்துவிடும்.

### 5. இறுதி இலக்கைக் கனவு காண்பது

நபியவர்கள் மதீனாவுக்கு சென்ற பின்னர் அந்த சமூக அமைப்பு எப்படியிருக்க வேண்டும்; அவர்களது நிர்வாகக் கட்டமைப்பு எவ்வாறு பலமாக அமைய வேண்டும்; பொருளாதாரம் எந்தளவு ஸ்திரமாக அமைய வேண்டும்; படை பலம் எவ்வாறு இருக்க வேண்டும்; இஸ்லாமிய சாம்ராஜ்யம் எவ்வாறு விரிய வேண்டும் என்பவற்றைப் பற்றியெல்லாம் கனவு கண்டார்கள்.



திருப்புமுனை என்பது பயணப் பாதையின் வளைவு போன்றது; அந்தத் திருப்பம்தான் எமக்கான புதிய பாதையை, எமது வாழ்வின் புதிய அத்தியாயத்தைக் காட்டித் தருகிறது. அந்தப் பாதையின் ஊடாக நாம் பயணித்துச் சென்று அடையும் இடம் எப்படியிருக்க வேண்டும் என்ற கனவு எமக்கு அவசியம். அந்தக் கனவுதான் அவ்வாறானதொரு அடைவை எமக்கு பெற்றுத் தரும்.

நாமும் கற்று முடித்த பின்னர் எமது எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் கனவு காண வேண்டும். இதுதான் திருப்புமுனையைத் திட்டமிடுகின்ற விடயத்தில் திருப்புமுனை எதை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்துவதாகும்.

திருப்புமுனை என்பது பயணப் பாதையின் வளைவு போன்றது; அந்தத் திருப்பம்தான் எமக்கான புதிய பாதையை, எமது வாழ்வின் புதிய அத்தியாயத்தைக் காட்டித் தருகிறது. அந்தப் பாதையின் ஊடாக நாம் பயணித்துச் சென்று அடையும் இடம் எப்படியிருக்க வேண்டும் என்ற கனவு எமக்கு அவசியம். அந்தக் கனவுதான் அவ்வாறானதொரு அடைவை எமக்கு பெற்றுத் தரும்.

சாதாரண தரப் பரீட்சை எழுத உள்ள நீங்கள் உங்கள் எதிர்காலத்தை வரைந்து கொள்வது அவசியமாகும். எனவே, துள்ளி விளையாடும் பதின்மப் பருவங்களிலிருந்து விடைபெற உள்ள நீங்கள் வாழ்வில் சாதிக்க விரும்பினால் உங்கள் வாழ்வைத் திட்டமிடுங்கள். பிறருடன் கலந்தாலோசனை செய்யுங்கள்.

அகரத்தின் வாசக உள்ளங்களான உங்கள் எதிர்காலம் வளமாக வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச

# அரபு மொழி தினம்

## டிசம்பர் 18

**அரபு** மொழியானது செமித்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இம் மொழியானது மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் பேசப்படுகிறது. இந்த செமித்திய மொழிக் குடும்பத்தில் பல மொழிகள் காணப்பட்டாலும் இன்று அவற்றில் பெரும்பாலானவை பேச்சு வழங்கில் காணப்படாமையால் அழிந்து போயுள்ளன. இன்று அம்மொழிக் குடும்பத்தில் உயிர் வாழும் மொழிகளாக அம்ஹரிக், ஹிப்ரு, டிக்ரினியா மற்றும் அரமைக் ஆகிய மொழிகளே காணப்படுகின்றன. அரபு மொழியும் உயிர் வாழும் ஒரு செமித்திய மொழியாகும்.

அரபு மொழி ஆரம்ப காலங்களில் செல்வாக்கு பெற்ற ஒரு மொழிப் பரம்பரையினைக் கொண்டு காணப்படவில்லை. அரபுத் தீபகற்பத்தில் இஸ்லாம் உதயமானவுடன் அதுவரை காலமும் இருண்ட யுகமாகக் காணப்பட்ட அரேபியத் தீபகற்பத்தில் வாழ்ந்த மக்களின் பாரம்பரியம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் மற்றும் உடை, நடை, பாவனை என்பன மாற்றம் கண்டன. அதிலும் குறிப்பாக அம் மக்களின் பேச்சு மொழியாக காணப்பட்ட அரபு மொழி அகிலம் தழுவிய தூதைச் சுமந்த ஒரு சர்வதேச மொழியாக மாறியது.

அல்குர்ஆன் இம்மொழியில் அருளப்பட்டமை இம் மொழியின் சிறப்பம்சமாகும். மேலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அரபு சமூகத்தில் தோன்றியமையும் இஸ்லாத்தின் போதனைகள் அரபு மொழியிலேயே இடம்பெற்றமையும் இம் மொழி சிறப்புப் பெறவும் வளர்ச்சியடையவும் காரணமாகியது.

வெறுமனே நாடோடி பழங்குடி மக்களால் பேசப்பட்டு வந்த அரபு மொழி இன்று ஐ.நா. சபையின் உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்றாகவும் உலகில் 26 நாடுகளின் தேசிய மொழியாகவும் காணப்படுகின்றது. இன்னும் பல நாடுகளில் இரண்டாம் மொழியாகவும் இது பேசப்படுகின்றது. 206 மில்லியன் மக்கள் இன்று அரபு மொழியினை உலகளவில் பேசுகின்றனர்.

### அரபு மொழி வரலாறு

அரபு மொழியானது அரபு தீபகற்பத்தின் மத்திய மற்றும் வடக்கு பகுதிகளில்தான் முதன் முதலில் தோற்றம் பெற்றது. பண்டைய செமித்திய மொழிப் பாரம்பரியத்தில் எஞ்சியிருக்கும் மொழியாக அரபு மொழியே காணப்படுகின்றது.

1901ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிரியா மற்றும் அரேபியாவின் எல்லைப் பகுதியான நபீதான் என்ற பகுதியில் வைத்து மிகப் பழைமை வாய்ந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த நபீதான் நெடுங் கணக்கினை ஆய்வு செய்தபோது அவ் எழுத்துக்கள் கி.மு. இரண்டாம் நுற்றாண்டு பழைமை வாய்ந்தவை என்றும் நபீதான் நெடுங்கணக்கே கி.பி. நான்காம் நுற்றாண்டிற்கு பின் பாரம்பரிய அரபு மொழியாக மாற்றம் பெற்றதாவும் கண்டறியப் பட்டது.

கி.பி. 4ஆம் நூற்றாண்டு தொடக்கம் இஸ்லாம் அரபு தீபகற்பத்தில் உதயமாகும் வரையான காலப்பகுதியில் பாரம்பரிய அரபு மொழியானது செல்வாக்குப் பெற்ற ஒரு மொழியாகக் காணப்படவில்லை. பாலைவன நாடோடிகளும் நாகரிகமற்ற காட்டு அரேபியர்களினதும் மொழியாகவுமே காணப்பட்டது. பின்னர் இஸ்லாத்தின் உதயத்துடன் பாரம்பரிய அரபு மொழியின் வரலாறே மாறியது.

வியாபாரம் போன்ற காரணங்களுக்காக ரோம, பாரசீக பேரரசுகளிலிருந்தும் சீனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்தும் பலர் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி வந்தனர். இவர்களுக்கு பண்டைய அரபு மொழியின் இலக்கண இலக்கிய மரபுகளைக் கற்பதற்கும் ஆய்வு செய்வதற்குமான வாய்ப்பு ஏற்பட்டது. கி.பி. 7-8ஆம் நூற்றாண்டு வரையான உமைய்யா மற்றும் அப்பாஸிய காலப்பகுதியிலும் அரபு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குடன் வளர்ச்சியடைந்தது.

### அ) அரபு இலக்கண, இலக்கியம்

அரபு மொழி ஒரு செழுமை மிக்க மொழியாகும். சொற் சுருக்கம், கருத்துச் செறிவு, உவமான உவமேயம் போன்றன அரபு மொழியில் காணப்படுகின்ற விசேட அம்சங்களாகும். அரபு மொழியில் 28 எழுத்துக்கள் காணப்படுகின்றன. அரபு மொழி வலது பக்கத்தில் இருந்து இடது பக்கத்தை நோக்கி எழுதப்படுகின்றது.

அரபு மொழியானது உலகில் காணப்படுகின்ற ஏனைய மொழிகளைவிட பல வகையிலும் வித்தியாசமான இலக்கண முறையினைக் கொண்டுள்ளது. அவற்றுள் பின்வருவன முக்கியமானவை:

- அரபு மொழியில் சொற்களில்கூட ஆண்பால், பெண்பால் என்ற வேறுபாடு காணப்படுகின்றது.
- அரபு இலக்கணத்தில் ஒருமை, பன்மை போல் இருமையும் மிக முக்கியமானதாகும்.
- அரபு மொழியில் ஒவ்வொன்றுக்கும் பல பெயர்களும் அவற்றைக் குறிக்க பல சொற்களும் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒட்டகம் என்ற சொல்லைக் குறிப்பதற்கு 1000 இற்கும் மேற்பட்ட சொற்கள் காணப்படுகின்றன.
- அரபு மொழியில் எந்த சொல்லும் மூன்று அடிப்படை எழுத்துக்களில் இருந்தே பிறக்கிறது.

### ஆ) அரபு இலக்கம்

இந்து அரேபிய எண் முறையானது முதலாம் மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் இந்தியர்களால் உருவாக்கப்பட்டதாகும். பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று மத்திய கிழக்கு அரபு நாடுகளில் உபயோகத்தில் உள்ள கிழக்கு அரபு இலக்கமாக மாறியுள்ளது.

### இ) அரபு நாடுகளின் சங்கம்

வடக்கு, வடமேற்கு ஆபிரிக்கா மற்றும் தென் மேற்கு ஆசியா ஆகிய பிராந்தியங்களை சேர்ந்த அரபு பேசும் 22 நாடுகள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன.

### டிசம்பர் 18 சர்வதேச அரபு மொழி தினம்

1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையில் ஆறு உத்தியோகபூர்வ மொழிகள் காணப்படுகின்றன. ஆங்கிலம், ரஷ்ய மொழி, பிரெஞ்சு, ஸ்பானிஷ், சீனம் மற்றும் அரபு ஆகியவையே அந்த ஆறு மொழிகளாகும். ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்படும் கூட்டத் தொடர்கள், மாநாடுகள் மற்றும் வெளியீடுகள் போன்ற அனைத்தும் இவ் ஆறு மொழிகளிலுமே வெளியிடப்படுகின்றன.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா.வின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் ஒவ்வொரு வருடமும் ஐ.நா.வின் உத்தியோகபூர்வ மொழிகளின் சர்வதேச தினம் உலக அளவில் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு மொழியும் தமது சர்வதேச மொழித் தினத்தை கொண்டாடுவதற்கு ஒவ்வொரு நாளைத் தெரிவு செய்துள்ளது.

1973ஆம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதி ஐ.நா. சபையினால் அரபு மொழி உத்தியோகபூர்வ மொழியாக அறிவிக்கப்பட்டது. எனவே, ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 18ம் திகதி அரபு மொழி தினம் கொண்டாடப்படுகின்றது. நாம் எங்கு பிறந்திருந்தாலும் என்ன மொழியினை கற்றிருந்தாலும் அரபு மொழியே எம் தாய் மொழியாகும். அல்குர்ஆனின் மொழியான அரபு மொழியைக் கற்பது எம் கடமையாகும்.

எம். ஸாதிக் (இஸ்லாஹி)


## விற்பனை முகவர் தேவை

உங்கள் அபிமான சஞ்சிகை அகரம் மாத இதழுக்கு நாடளாவிய ரீதியில் விற்பனை முகவர்கள் தேவை.

மாணாக்கருக்கு அறிவும் நல்லொழுக்கமும் கற்பிக்கும் அகரம் இதழின் விற்பனை முகவர் ஆகி ஈருலக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:


சகோதரர் அஷ்மல்கான்

0776 98 42 02 | 071 811 26 82




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



“ஒருவகையில் பார்க்கப் போனால் பரீட்சை என்பது, அனைவருக்கும் குறிப்பிட்ட கால வரையறை கொடுக்கப்பட்டு அதற்குள் யார் சிறப்பாக விடையளிக்கின்றார்கள் என்பதை மாத்திரமல்லாமல், யார் அந் நேரத்தை சிறப்பாக நிர்வகித்து வெற்றி பெறுகின்றார்கள் என்பதையும் சோதிப்பதே ஆகும். அதனால்தான் பரீட்சைகளில் யார் சிறப்பாக விடையளிக்கின்றார்கள் என்பது மாத்திரமல்ல, யார் குறிப்பிட்ட நேரத்திற்குள் பதிலளிக்கிறார்கள் என்பதும் பரீட்சிக்கப்படுகிறது.”

# பரீட்சை நேர முகாமைத்துவம்

**பொதுவாக** பரீட்சைகள் 45 நிமிடங்கள் முதல் மூன்று மணித்தியாலயங்களைக் கொண்டவையாக அமைந்திருக்கும். பரீட்சை எழுதுவோர் அக் குறுகிய காலப் பகுதிக்குள் தங்களது அறிவையும் திறனையும் வெளிக்காட்டும்படி பரிட்சிக்கப்படுகின்றனர். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அல்லது எவ்வளவு விடயங்கள்தான் தெரிந்திருந்தாலும் அக் குறுகிய காலப் பகுதிக்குள் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கத் தவறுவோர் பரீட்சையில் தோற்றவர்களாகவே கருதப்படுகின்றனர்.

எனவே, உரிய நேரத்தில் பரீட்சையை எழுதி முடிப்பதே பரீட்சையின் வெற்றியாகும். வருடங்கள், மாதங்கள், வாரங்கள், நாட்கள் என்பவற்றின் பெறுமதியை உணராதவனும் நிமிடங்களின் பெறுமதியை உணரும் ஒரு சில மணித்தியாலங்கள்தான் பரீட்சை எழுதும் நாழிகைகள். அந்த நேரத்தில் எமது மூளை மாத்திரமல்ல, கையும் மிக விரைவாகச் செயற்பட்டு பதில்களை அளிக்க வேண்டும்.

ஒருவகையில் பார்க்கப் போனால் பரீட்சை என்பது, அனைவருக்கும் குறிப்பிட்ட கால வரையறை கொடுக்கப்பட்டு அதற்குள் யார் சிறப்பாக விடையளிக்கின்றார்கள் என்பதை மாத்திரமல்லாமல், யார் அந் நேரத்தை சிறப்பாக நிர்வகித்து வெற்றி பெறுகின்றார்கள் என்பதையும் சோதிப்பதே ஆகும். அதனால்தான் பரீட்சைகளில் யார் சிறப்பாக விடையளிக்கின்றார்கள் என்பது மாத்திரமல்ல, யார் குறிப்பிட்ட நேரத்திற்குள் பதிலளிக்கிறார்கள் என்பதும் பரீட்சிக்கப் படுகிறது.

சரி, நாம் எவ்வாறு பரீட்சை நேர முகாமைத்துவத்தை மேற்கொள்வது?

நேர முகாமைத்துவம் என்பது கோட்பாட்டைப் படித்து வருவதல்ல. அது நடைமுறை சார்ந்தது. நேர முகாமைத்துவத்தைப் பற்றி ஒருவர் எவ்வளவு தெரிந்திருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்தாத போது அது பயனற்றுப் போகிறது. இந்த வகையில் பரீட்சை நேர முகாமைத்துவம் என்பது மிக முக்கியமானது.

- உங்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு வழங்கப்பட்ட நேரத்தை நிமிடங்களில் கணக்கிடுங்கள். உதாரணமாக 03 மணித்தியாலங்கள் என்றால் 3 x 60=180 நிமிடங்கள்.
- நீங்கள் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கையை உங்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கள் அவற்றுக்கான புள்ளிகள் என்பனவற்றின் அடிப்படையில் பிரித்துக் கொள்ளுங்கள்.

உதாரணமாக, பரீட்சை எழுதுவதற்கு வழங்கப்பட்ட நேரம் 03 மணித்தியாலயங்கள். விடையளிக்கப்பட வேண்டிய வினாக்கள் 05 எனின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வினாவுக்கு 35 நிமிடங்கள் என மனக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். பரீட்சை 09:00 மணிக்கு ஆரம்பமாகின்றது என்றால் பரீட்சை வினாத்தாளின் ஓரத்தில் நாம் விடையளிக்கத் தெரிவு செய்த வினாக்களின் ஒழுங்கிற்கு ஏற்ப நேரத்தைக் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக் காட்டு:

| | | |
|---|---|---|
| 09:05 | 09:40 | வினா 01).................. |
| 09:40 | 10:15 | வினா 02).................. |
| 10:15 | 10:50 | வினா 03).................. |
| 10:50 | 11:25 | வினா 04).................. |
| 11:25 | 11:55 | வினா 05).................. |

- மேலும், உப வினாக்களுக்கும் அவற்றிற்குரிய நேர வரையறையை செய்து கொள்ள வேண்டும். நன்கு எம்மைப் பயிற்றுவித்து இதில் காலத்தைக் கடத்தாது மிக விரைவாக இவற்றைச் செய்து முடிக்க வேண்டும்.

- டிஜிட்டல் கடிகாரம் உபயோகிக்கவும்.

பின்னர் நீங்கள் நிர்ணயித்த நேரத்தில் விடையளிக்க முயலுங்கள். ஆனால் நடைமுறையில் சிலபோது 01வது, 02வது வினாவுக்கு விடையளிக்க அதிக நேரம் எடுக்கலாம். அப்படி ஏதேனும் அனுபவம் உங்களுக்கு இருந்தால் அதனையும் கவனத்திற் கொண்டு நேரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

குறித்த நேரத்திற்குள் நீங்கள் முழுமையாக ஒரு கேள்விக்கு விடையளிக்க உங்களைப் பயிற்றுவித்திருக்க வேண்டும். அவ்வாறு பயிற்றுவித்தும் சிலபோது உங்களால் விடையளிக்க முடியாவிட்டாலும் நீங்கள் பெரும்பகுதி விடையை எழுதியிருப்பீர்கள். எனவே, முடிவுரை ஒன்று எழுதுவதற்குரிய அளவு சிறிய இடத்தை தாளில் விட்டு விட்டு புதிய பக்கத்தில் அடுத்த வினாவுக்கு விடையளிக்க ஆரம்பியுங்கள். இவ்வாறே அனைத்து வினாக்களையும் செய்து முடித்த பின்னர் நேரம் மிகுதியாக இருந்தால் பூரணப்படுத்தாத விடைகளைப் பூரணப்படுத்துங்கள்.

இது போன்ற நுணுக்கங்கள் கட்டுரை வினாக் களுக்குப் பொருந்தும். ஒரு சொல்லில் விடைய ளிக்க வேண்டிய வினாக்கள், கோடிட வேண்டிய வினாக்கள், நுண்ணறிவு வினாக்கள் என்பனவற் றிற்கு விடையளிப்பதில் நேரம் மிக மிக முக்கியம்.

உதாரணமாக, ஒரு வினாத்தாளில் 01 மணித்தியாலயத்திற்குள் 60 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்றால் ஒரு வினாவுக்கு விடையளிக்க ஒரு நிமிடம் மட்டுமே இருக்கும். எனவே, இக் குறுகிய காலப் பகுதிக்குள் விடையளிப்பதற்கு மிக விரைவாக மனக் கணக்கிட்டு 15 வினாக்களுக்கு எடுக்கும் நேர அளவைக் கருத்திற் கொண்டு நேரத்தை பிரித்துக் கொள்ளுங்கள்.

பின்னர், முதல் 15 நிமிடங்களுக்குள் 15 வினாக்களுக்கு விடையளித்துள்ளீர்களா என சரி பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வாறே மிகுதி நேரத்தையும் அமைத்துக் கொள்ளுங்கள்.

இதனை பரீட்சை நேரத்தில் பரீட்சித்துப் பார்ப்பது, தரையில் நீந்திப் பழகிவிட்டு கடலில் போட்டிக்குச் செல்வதைப் போன்றதாகும். எனவே, நல்ல பயிற்சியும் நிறைய முயற்சியும் நீங்கள் மேற்கொண்டிருந்தால் அது உங்களுக்கு வெற்றியளிக்கும்.

ஒரு நபித்தோழர் நபியவர்களிடம் கேட்டார்:
"யா ரஸூலல்லாஹ்! மனிதர்களில் தொலை நோக்கும் விழிப்புணர்வும் கொண்டவர் யார்?"
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:
"யார் மரணத்தை அதிகமதிகம் நினைவுகூர்கிறாரோ மேலும் யார் மரணத்திற்காக தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறாரோ அவர்கள்தான் அறிவாளிகள்; தொலைநோக்குடன் சிந்திப்பவர்கள். இவர்கள் உலகிலும் கண்ணியம் பெறுகிறார்கள்; மறுமையிலும் சிறப்பு அடைகிறார்கள்." (தபராணி)

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்;
நான் நபியவர்களிடம் கேட்டேன், "அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் எது?"
நபியவர்கள் கூறினார்கள்: "குறித்த நேரத்தில் தொழப்படும் தொழுகை. அடுத்து தாய் தந்தையரைப் பேணுதல். பின்னர் இறைவழியில் போராடுதல்." (அல்புகாரி, முஸ்லிம்)

"ஆயுள் முழுவதும் நீங்கள் விடுகின்ற மூச்சு ஒவ்வொன்றும் விலைமதிப்பற்ற முத்துக்கள். அதற்கு மாற்றீடாக எதுவும் இல்லை."
இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹிமஹுல்லாஹ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்

**பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அதிகாலையில் எழும்பும் மனிதன் சிட்டுக்களைப் போல் தனது உழைப்புக்காக பறந்து திரிகிறான். அவனது வாழ்க்கை ஓர் இயந்திரமாகவே மாறிவிடுகின்றது. தனது வாழ்க்கைக்காக, பிள்ளைகளின் படிப்பிற்காக ஏனைய தேவைகளுக்காக அவன் உழைக்க வேண்டி உள்ளது.

இவ்வாறு சுழன்று திரியும் மனிதன் ஒருநாள் சுகவீனமுற்று பாயிலே சுருண்டு விழுகிறான். அப்பொழுதுதான் ஓய்வு இன்றி, தூக்கமின்றி, சாப்பாடின்றி தான் அழைந்து திரிந்தது ஞாபகத்திற்கு வருகின்றது. வைத்தியரின் ஆலோசனைப்படி நடக்க முயற்சிக்கிறான். வெற்றியும் பெறுகிறான். சில வாரங்கள் கழிந்த பின் மீண்டும் பழைய நிலைக்குச் சென்று தன்னை மறந்து உழைக்கத் தொடங்குகிறான். மீண்டும் அதே ஆபத்தை தான் அடைய வேண்டுமே என்பதை அவன் என்றுமே நினைத்துப் பார்ப்பதில்லை.

1. மனிதன் எப்போது தூங்கி எழுகின்றான்?

   ........................................................................

2. மனிதன் எப் பறவைவ்யைப் போல் தனது வாழ்வை அமைத்துக் கொள்கிறான்?

   ........................................................................

3. மனிதன் ஏன் உழைக்க வேண்டி உள்ளது?

   ........................................................................

4. இரண்டாம் பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரும் வினையுமாக வரும் சொல் எது?

   ........................................................................

5. தோல்வி என்பதன் எதிர்ப்பதம் யாது?

   ........................................................................

6. முதல் பந்தியில் இடம்பெற்றுள்ள பன்மை உயர்திணைச் சொல் ஒன்றை எழுதுக.

   ........................................................................

சாப்பாடு என்பதற்கு ஒத்த கருத்துக்களைக் குறிப்பிடுக.

7. ............................... 8. ...............................

9. அவன் என்பதன் பன்மைச் சொல் யாது?

   ........................................................................

10. மனிதன் சுகவீனம் அடையும்போது யாருடைய ஆலோசனையைப் பெறுகிறான்?

    ........................................................................

11. இலைகளை சுருட்டி தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொள்ளும் பிராணி.

    i. சிலந்தி ii. எறும்பு
    iii. நத்தை iv. செவ்எறும்பு

12. சில நிமிடங்களேனும் நீர் இல்லாவிடின் வாழ முடியாத பிராணி எது?

    i அணில் ii. கொக்கு
    iii. மீன் iv. வாத்து

13. வண்ணத்துப் பூச்சி முட்டை இடுவது.

    i. தாவரத் தண்டில் ii. தாவர இலைகளில்
    iii. நீரில் iv. நிலத்தில்

14. வெளிநாட்டுக் கடிதங்களை இடவேண்டிய பெட்டியின் நிறம்.

    i. சிவப்பு ii. பச்சை
    iii. நீலம் iv. மஞ்சள்


15. தலதா மாளிகை அமைந்துள்ள மாகாணம் எது?

    i. மேல் மாகாணம் ii. மத்திய மாகாணம்
    iii. வட மாகாணம் iv. தென் மாகாணம்

16. கண்டி பெரகரவுக்கு பயன்படும் மிருகம்.

    i. குதிரை ii. யானை
    iii. மாடு iv. ஒட்டகம்

பின்வரும் படத்துடன் தொடர்புடைய விளையாட்டுக்களைத் தெரிவு செய்து எழுதுக.



17. ....... 18. ......... 19. ........ 20. .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் நிறைகளை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக.

21. 2000g 3kg 1kg 500g

..............................................................................

22. 1500g 500g 2kg 1000g

..............................................................................

23. 200 ரூபாவின் $\frac{3}{4}$ பங்கு எவ்வளவு? ..................

24. 300 ரூபாவின் $\frac{1}{2}$ பங்குடன் மேலும் 50 ரூபாவைக் கூட்டினால் வரும் விடை யாது?


..............................................................................

25. இடைவெளிக்கு பொருத்தமான எண் எது?

| | | |
|---|---|---|
| 5 | 7 | 12 |
| 8 | ...... | 14 |
| 9 | 4 | 13 |

i. 6 ii. 8 iii. 5 iv. 4

26. வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்.




i. 23 ii. 21 iii. 26 iv. 28

27. 3070 → 7030, 6753 → 5367, 8199 → ......... வெற்றிடக் கூட்டுக்கு வர வேண்டிய எண் எது?

i. 9981 ii. 9981 iii. 9198 iv. 1989

28. தரப்பட்ட எண்களை வைத்து ஏறுவரிசைப் படுத்தினால் வருவது?

| | |
|---|---|
| A | 7707 |
| B | 7770 |
| C | 7077 |
| D | 7007 |

i. BCDA
ii. DCAB
iii. ABDC
iv. DACB

29. நெத்தலியில் அதிகமுள்ள சத்து எது?

i. கல்சியம் ii. கொழுப்பு
iii. மாபொருள் iv. விற்றமின்

30. நறுமணமுள்ள பூக்களில் ஒன்று.

i. செவ்வரத்தை ii. காகிதப்பூ
iii. மல்லிகை iv. குரோட்டன்

31. பின்வரும் தாவரங்களில் பானமாகப் பயன் படும் விதை

i. தேயிலை ii. கோப்பி
iii. சோளம் iv. பயறு

32. வருடம் முழுவதும் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?

i. பனை ii. தென்னை
iii. மரமுந்திரிகை iv. மா

33. மேசன் பயன்படுத்தும் உபகரணம் எது?

i. சாந்தகப்பை ii. சீவுளி
iii. குறடு iv. அரம்

34. 2kg சீனியில் 900 கிராம் சீனி விற்கப்பட் டால் மிகுதியாக இருக்கும் சீனியின் நிறை .....

35. 3 மீற்றர் நீளமான கம்பியை நான்கு சம துண்டுகளாக வெட்டினால் ஒரு துண்டு கம்பியின் நீளம். ..................

36. பெட்டியொன்றில் 135 சவர்க்கார கட்டி களை அடுக்கலாம். அவ்வாறான 5 பெட்டிக ளில் எத்தனை சவர்க்கார கட்டிகள் அடுக்க லாம்? ...........

37. தோட்டம் ஒன்றில் 2000 தென்னை மரங்கள் இருந்தன. அதில் 299 தென்னை மரங்கள் வெட்டப்பட்டால் மிகுதியாக இருக்கும் தென்னை மரங்களின் எண்ணிக்கை? ...............

38. காலை 7.35 மணிக்கு வீட்டில் இருந்து புறப் பட்ட குமார் 25 நிமிடங்களில் பாடசா லையை அடைந்தான். அவன் பாடசா லையை அடைந்த நேரம்? ..................................

பின்வரும் சொற்களை ஒழுங்குப்படுத்தி எழுதுக.

39. க-ம்-நா-ரி-க: ..............................

40. தா-ட-சி-க: ..............................

41. மெ-டு-தை-ப-த்-ட்: ..............................

பின்வரும் சொற்களுக்கு எதிர்பாற் கருத்துக்களை எழுதுக.

42. உழத்தி: ..............................

43. அரசி: ..............................

44. இடையன்: ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவாய்க்குக் கோடிடுக.

45. புத்தகத்தை மாணவன் வாசித்தான்.

46. கண்டி நகரை வாலிபர்கள் அடைந்தார்கள்.

பொருத்தமான விடைகளை எழுதுக.

47. கொடி வகையுள் ஒன்று

48. தேனீயின் ஒலி மரபு

49. தென்னையில் கிடைப்பது

50. வயலில் உள்ளது

51. சுவையில் ஒன்று

52. பழப்பாகு தயாரிக்கப் பயன்படும் பழங்கள் யாவை?


i. விளா, திராட்சை

ii. அப்பிள், தோடம்பழம்

iii. மா, விளா

iv. பப்பாசி, திராட்சை

53. இப் பென்சிலின் நீளம் யாது? ..................




54. டிசம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் உற்சவம்.

i. புதுவருடப் பிறப்பு　ii. வெசாக்

iii. நத்தார்　iv. தீபாவளி

55. தமிழ், சிங்கள புத்தாண்டு எந்த மாதத்தில் கொண்டாடப்படுகின்றது.

i. ஜனவரி　ii. ஏப்ரல்

iii. டிசம்பர்　iv. மே

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தைத் தருக.

56. Month .................. 57. Family ......................

பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தைத் தருக.

58. தவச ................. 59. சத்துட்ட ........................

சரியான சொல்லுக்குக் கோடிடுக.

60. (வலி, வளி, வழி) இன்றி நாம் உயிர் வாழ முடியாது.

61. (வலி, வளி, வழி)யால் ராமன் அவதியுற்றான்.

62. (வலி, வளி, வழி) நெடுகிலும் குழந்தை அடம்பிடித்தது.

எனது தகப்பனார் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

63. ..............................................................

64. ..............................................................

65. ..............................................................

## வினாப்பத்திரம் ii

| | |
|---|---|
| 1. ii | 26. நாய் |
| 2. i | 27. யானை |
| 3. i | 28. நெல் |
| 4. iv | 29. கோள் |
| 5. iii | 30. பொய் |
| 6. iv | 31. iii |
| 7. ii | 32. iv |
| 8. ii | 33. iii |
| 9. iii | 34. 9098, 9100 |
| 10. C | 35. iii |
| 11. மந்திரி | 36. iii |
| 12. மாதா | 37. ii |
| 13. கள்ளி | 38. ii |
| 14. தாதி | 39. iii |
| 15. குறத்தி | 40. iv |
| 16. iii | 41. யார் |
| 17. i | 42. அவர்களது |
| 18. ii | 43. உனது |
| 19. ii | 44. என்னுடைய |
| 20. ii | 45. நீங்கள் |
| 21. iv | 46. i |
| 22. iii | 47. ii |
| 23. iv | 48. iii |
| 24. i | 49. iii |
| 25. i | 50. i |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் II**

**நேரம் 1 மணி 15 நிமிடம்**

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

A, B ஆகிய படங்களுக்கு இடையே உள்ள தொடர்பை அவதானித்து C படத்திற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்க.

**1.**



A B C     i. ii. iii.

**2.**

| A | B | C | | i. | ii. | iii. |
|---|---|---|---|---|---|---|
| P | Q | T | | U | V | W |


**3.**




A B C     i. ii. iii.

தரப்பட்டுள்ள படங்களில் வேறுபட்ட படத்தை தெரிவு செய்க.

**4.**



**5.**



**6.**



முதலாவது எண் கூட்டினுள் உள்ள எண் பெறுமானத்திற்குப் பிரதியீடு செய்யத்தக்க எண் கூட்டை தரப்பட்டுள்ள எண் கூட்டில் இருந்து தெரிவு செய்க.

**7.** 8x4    i. 2x2x3    ii. 4x2x4    iii. 2x2x2

**8.** 14+29    i. 20+13    ii. 19+24    iii. 24+29

**9.** நீட்டல் அளவைகளை ஒழுங்குபடுத்தி எழுதினால் பெறக்கூடிய சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்க.

i. மில்லி மீற்றர், கிலோ மீற்றர், சென்றி மீற்றர்

ii. கிலோ மீற்றர், மில்லி மீற்றர், சென்றி மீற்றர்

iii. மில்லி மீற்றர், சென்றி மீற்றர், மீற்றர்

**10.** இக் கூட்டங்களை சரியாகக் காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

i. MO NP    ii. NO MP    iii. MN OP

வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக

**11.** மன்னன், மந்திரி, கோன், அரசன்

**12.** மாதா, தந்தை, தகப்பன், அப்பா

பெண்பால் சொல்லின் கீழ் கோடிடுக

**13.** கள்ளி, தச்சன், ஆசிரியன், வாலிபன்

**14.** திருடன், தாதி, மகன், புத்திரன்

**15.** குயவன், உழவன், குறத்தி, மாணாக்கன்

பின்வரும் A,B,C,D என்ற அடைப்புக்குள் சில பழங்களும் சில காய்கறிகளும் கிழங்கு வகைகளும் காணப்படுகின்றன. இதற்கேற்ப கீழ்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.

A. கத்தரிக்காய், மாம்பழம், பப்பாசிப்பழம், உருளைக் கிழங்கு

B. வற்றாளை, போஞ்சி, அப்பிள், கோவா

C. திராட்சை, கரட், பாகற்காய், வெண்டிக்காய்

D. மரவள்ளி, புடோல், விளாம்பழம், கொய்யாப் பழம்

**16.** இந்த அடைப்புக்கிடையே இரண்டு காய்கறிகள் வீதம் உள்ள இரண்டு அடைப்புக்களும் எவை?

i. A,B    ii. C,D    iii. B,C

**17.** இரண்டு பழங்கள், ஒரு காய்கறி வீதம் உள்ள இரண்டு அடைப்புக்களும் யாவை?

i. A,D    ii. B,C    iii. B,D

**18.** ஒரு பாடசாலையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டாத விடயம் யாது?

i. கழுத்துப்பட்டி    ii. இடுப்புப் பட்டி

iii. பாடசாலை கீதம்

iv. பாடசாலைக் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கூட்டமாக வாழும் பிராணி எது?

i. சிலந்தி ii. குளவி

iii. வண்டு iv. மண் புழு

20. பின்வரும் எத்தாவரத்தின் பூ, காய், பழம் போன்ற அனைத்தும் உணவுக்கு பயன்படுத் தப்படுகிறது.

i. அகத்தி ii. வாழை

iii. பலா iv. முருங்கை

21. வாழைப் பூவை நாடி வரும் பிராணி எது?

i. கிளி ii. வௌவால்

iii. காகம் iv. அணில்

22. வானவில் தோன்றாத நேரம்.

i. காலை ii. மாலை

iii. இரவு iv. மதியம்

23. பழுதடைந்த உணவின் இயல்பு.

i. பூஞ்சணம் பிடித்திருக்கும்

ii. சுவை குறைவடைதல்

iii. துர்நாற்றம் வீசும்

iv. மேற்கூறிய மூன்றும் சரி

24. பின்வருவனவற்றுள் முலையூட்டி எது?

i. கீரிப்பிள்ளை ii. ஆமை

iii. பல்லி iv. பருந்து

25. அனைத்தும் உண்ணியாகக் கொள்ளக் கூடியது.

i. மனிதன் ii. பருந்து

iii. சிங்கம் iv. பசு

முதல் சொல்லுக்குப் பொருந்தும் மிகப் பொருத்த மான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

26. மோப்ப சக்தி (புலி, நாய், பல்லி)

27. தாவரம் (கரடி, சிறுத்தை, யானை)

28. தானியம் (நெல், கோவா, உருளைக் கிழங்கு)

29. இரவு (சூரியன், கோள், இருள்)

30. உண்மை (சேய்மை, பொய், ஆண்மை)

வகுப்பு ஒன்றில் நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் பின்வருமாறு:

அப்பாஸ்: 2000.10.10 அன்வர்: 2000.11.11

அக்மல்: 2000.10.14 அனிஸ்: 2000.01.01

31. மேலேயுள்ள நான்கு பிள்ளைகளில் மூத்தவர் யார்?

i. அன்வர் ii. அனிஸ்

iii. அப்பாஸ் iv. அக்மல்

32. இவ் நான்கு பிள்ளைகளில் மிகவும் இளை யவர் யார்?

i. அன்வர் ii. அனிஸ்

iii. அப்பாஸ் iv. அக்மல்

33. 2kg சீனி பைக்கற்றுகளில் சம அளவாக அடைக்கப்பட்டால் ஒரு பைக்கற்றின் நிறை யாது?

i. 100 கிராம் ii. 200 கிராம்

iii. 250 கிராம் iv. 400 கிராம்

34. முந்திய எண், பிந்திய எண்களை எழுதுக.

............. 9099 ............

35. 250 கிராம் கடலையின் விலை ரூபா 30.00 ஆகும். 2 கிலோ கிராம் கடலையின் விலை.

i. ரூபா 120.00 ii. ரூபா 360.00

iii. ரூபா 240.00 iv. ரூபா 260.00

36. ரூபா 500.00இன் $\frac{1}{4}$ பங்கு எவ்வளவு?

i. ரூபா 250.00 ii. ரூபா 225.00

iii. ரூபா 125.00 iv. ரூபா 400.00

37. பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படி எழுதினால் வருவது.

1099 1199 1909 1999

i. 1999, 1199, 1099, 1909

ii. 1999, 1909, 1199, 1099

iii. 1909, 1099, 1199, 1999

iv. 1999, 1099, 1909, 1199

38. எத்தனை 5 ரூபா நாணயங்களைக் கொண்டு ரூபா 50ஐ ஆக்கலாம்?

i. 20 ii. 10 iii. 25 iv. 5

39. EARLY என்பது 82753 எனின் YEAR என்பது குறிக்கும் இலக்கம்.

i. 3572 ii. 8725 iii. 3827 iv. 75672

40. 1m நீளமான கம்பியை நான்கு சம அளவாக வெட்டினால் ஒரு கம்பித் துண்டின் நீளம் யாது?

i. 50m ii. 25m iii. 4m iv. 25cm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைப்புக்குள் உள்ள சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

(உனது, என்னுடைய, யார், அவர்களது, நீங்கள்)

41. .......... உன்னை அழைத்தது?

42. இவர்கள் ......... சகோதரர்கள்.

43. .............. புத்தகத்தை எங்கே வைத்தாய்?

44. .......... வயது உனது வயதையும் விட அதிகம்.

45. ............... உண்மையை பேசுங்கள்.

வித்தியாசமான கருத்தைத் தரும் சொல்லின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

46. i. நான் எப்பொழுதும் உண்மையை பேசுவேன்.
 ii. நான் பொய் பேசுவேன்.
 iii. நான் ஒருபோதும் உண்மையை பேசிய தில்லை.

47. i. மாடு ஒரு தாவர உண்ணி.
 ii. மாடுகள் மாமிசத்திற்காக பயன்படுத்தப் படும்.
 iii. மாடு புல் மேயும்

48. i. ஆறுகள் மலைகளில் இருந்து உற்பத்தி யாகி கடல்களில் போய் விழுகின்றன.
 ii. ஆறுகள் கடலோடு சங்கமிக்கின்றன.
 iii. களனி கங்கையை நோக்கி கடல் பாய்கின்றது.

பிழையாக எழுதப்பட்ட தொகுதிக்குக் கோடிடுக.

49. i. பன்னீர், தண்ணீர், கண்ணீர்
 iii. தேநீர், இளநீர், வெந்நீர்
 iii. தொலைக்காட்சி, வானொளி, தொளைபேசி

50. i. புடோல், பாகற்க்காய், பயற்றங்காய்
 ii. தொழிலாளி, முதலாளி, காவலாளி
 iii. காட்சி, பட்சி, முயற்சி

## வினாப்பத்திரம் I

1. அதிகாலை
2. சிட்டு
3. தனது வாழ்க்கை, பிள்ளைகளின் படிப்பு
4. பாய்
5. வெற்றி
6. பிள்ளைகள்
7. ஆகாரம்
8. இரை
9. அவர்கள்
10. வைத்தியர்
11. iv
12. iii
13. ii
14. iii
15. ii
16. ii
17. கூடைப்பந்து
18. பட்மிடன்
19. உதைப்பந்து
20. ஹொக்கி
21. 500g, 1kg, 2000g, 3kg
22. 500g, 1000g, 1500g, 2kg
23. ரூபா 150.00
24. ரூபா 200.00
25. 6
26. 23
27. 9981
28. ii
29. i
30. iii
31. ii
32. ii
33. i
34. 1100g-1kg 100g
35. 75cm
36. 675
37. 1701
38. முற்பகல்/ காலை 8.00மணி
39. நாகரிகம்
40. கடதாசி
41. பட்டு மெத்தை
42. உழவன்
43. அரசன்
44. இடைச்சி
45. மாணவன்
46. வாலிபர்கள்
47. கொடி தோடை
48. ரீங்காரம்
49. இளநீர்
50. வரப்பு / வரம்பு
51. இனிப்பு / கைப்பு
52. ii
53. 4cm
54. iii
55. ii
56. வாரம்/ கிழமை
57. குடும்பம்
58. நாள்
59. சந்தோசம்
60. வளி
61. வலி
62. வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்



# நீ வேண்டும் எனக்கு

கறை படிந்த உள்ளமதில்
கரையில்லா கைகளின் தட்டல்கள்
திறந்து பார்த்தேன் ஒரு நொடியில்
திறந்து விட்டது என் மனக் கதவு


தட்டியது என்ன?
உணர்வா உயிரா?
இல்லை அதை விடவும் உயர்ந்தது
அருள் மறையாம் திருக்குர்ஆன்.

நாடிகள் என்ன? நாளங்கள் என்ன?
கலைந்தோடும் குருதியோடும்
இறை வழியின் பால் என் உள்ளத்தை
ஈர்த்து சென்றதே குர்ஆன்.

ஏங்கித் தவிக்கும் ஓர் உயிர்
இறையில்லத்தில் கையேந்துகிறது
விடை கொடு இறைவா!
என் மடி சுமக்க திருக்குர்ஆன்
தினம் வேண்டும்.

**எம்.எஸ்.எப். சஸ்னா,**
**தரம் - 10, பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.**

# நீரில்லையேல் உலகமே இல்லை



இயற்கையாய் வந்தவளே
ஈரமாய் நீராவியாய்
இருப்பவளே
நீ இல்லை என்றால்
காலநிலை ஏது

உயிரினங்களுக்கு உயிரூட்டும்
உன்னதமானவளே
நீ இல்லை என்றால்
தாவரங்கள் ஏது

மலையில் பிறந்து
நதியாக வந்தவளே
நீ இல்லை என்றால்
நீர் வீழ்ச்சிகள் ஏது

மொத்தத்தில் நீ
இல்லை என்றால்
உலகமே இல்லை

**எஸ்.எம். பயாஸ்,**
**தரம் 09, அ/ நாச்சியாதீவு மு.ம.வி., நாச்சியாதீவு**

# என் தாய்க்கோர் இன்னிசை

அன்புக்கு ஆழம் தேடினேன் - தாயே
என் இதயமதில் ஊக்கம் அளித்தும்
என் ஆக்கங்களுக்கு ஆர்வம் அளித்தும்
என் வெற்றிகளுக்கு தோள் கொடுத்தும்
என் உயிரோடு ஒன்றிய உறவே

இமை விழித்து படிக்கும் போதும்
விழி மூடித் தூங்கும் போதும்
அழியாத உன் எண்ணங்கள்
அடியெடுத்து வைக்கிறது என் நெஞ்சமதில்

அன்னை அரவணைப்பில் இருந்த காலம்
அற்புதம் - இருந்தும்
இஸ்லாத்திற்காய் உழைக்கும் காலம்
இதை விட அதிசயம்.

அமாவாசையில் ஆக்கிரமிக்கும்
நிசப்தத்தில் - என் உயிர்
உன்னை அழைக்கிறது
தாயே நீ எங்கிருக்கிறாய்
நிலவின் ஒளியிலா?
என் உயிரின் உயிரிலா?

**ஏ.எல். றிபாஸ் ஸர்மிலா**
**வாழைச் சேனை**


# வாழ்க்கை

புயலாக மாறாத வரை
வாழ்க்கை ஒரு தென்றல்
பராமரிப்பு குறையாத வரை
வாழ்க்கை ஒரு பூங்கா
எண்ணங்கள் சிதறாத வரை
வாழ்க்கை ஒரு வரைபடம்
முயற்சிகள் அகலாத வரை
வாழ்க்கை ஒரு பேரின்பம்



**சுமையா ஹுஸைன்**
**தி/ அல்பதாஹ் மு.ம.வி., நிலாவெளி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றும் கற்றலுக்கு இன்றியமையாத ஞாபக சக்தி என்பன ஒரு மாணவன் தன் இலக்கை அடைவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இவ் அடிப்படை அம்சங்களைக் கேள்விக்குறியாக்கும் எத்தனையோ விடயங்கள் நாளாந்தம் மலிந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய விடயங்களைக் கவனமாகக் கையாண்டு களைந்தெறிய, முன்னெச்சரிக்கையோடு பாதுகாப்பாக பயணத்தைத் தொடர மாணவர் சமுதாயம் சதாவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக உருவெடுக்கும் இத்தகைய மோசமான அம்சங்களிலிருந்து தமது எதிர்காலச் செல்வங்களையும் நாளைய தலைமுறையையும் பாதுகாக்கின்ற பொறுப்பு, சமூகமயமாக்கல் முகவர்களுள் அடிப்படையான மற்றும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்ற பெற்றாருக்கும் ஆசிரியர்களுக்கும் உரியதாகும். இலக்கு நோக்கிய பயணத்தில் மாணவர்களுக்குத் தடையாக அமைகின்றவைகளில் இணையங்களுக்கும் சமூக வலைத்தளங்களுக்கும் பிரதானமான பங்கு உண்டு.

# இணையதளமும் மாணவர்களின் இலட்சியப் பயணமும்

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

**கல்விக்** கடலில் அறிவுத் தாகம் தீர்த்து, வாழ்க்கையில் அரிய பல சாதனைகள் படைக்கும் கனவுகளோடும் உயர் இலட்சியங்களோடும் வாழ்க்கையின் நொடிப்பொழுதுகளை மிகக் கவனமாகக் கழிக்கும் பருவமே பள்ளிப் பருவம். சாதனைகள் படைக்க நாடும் எவரும் பல சோதனைகள் தாண்ட வேண்டும் என்பது பொது விதி. இவ்விதிக்கு வேட்கைகள் நிறைந்த மாணவர்கள் விதிவிலக்கானவர்களல்லர்.

நாம் வாழும் இந்த யுகம் அறிவியல் யுகம். இந்த யுகத்தில் மனித வாழ்க்கையுடன் தொடர்பான அனைத்து அம்சங்களும் போட்டித் தன்மை நிறைந்ததாகக் காணப்படுவதை யாராலும் மறுக்க இயலாது. இதில் தாமும் போட்டி போட்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொருவருக்கும் கல்வி ஒரு கட்டாயத் தேவையாகும்.

கல்விப் பயணத்தில் கால்பதித்த மாணவர்கள் தங்களுடைய இறுதி இலக்கை, இலட்சியத்தை அடைவதில் பல தடைகளையும் சவால்களையும் தமக்குள்ளாலும் வெளியிலிருந்தும் நாளாந்தம் எதிர்கொள்கின்றனர்.

இலக்கு மீதான தீராத ஆசை, ஆசையை நிறைவேற்றுவதற்கான விடா முயற்சி, முயற்சிக்கு முதலீடாக அமையும் நேர முகாமைத்துவம்

### இணையங்களும் சமூக வலைத்தளங்களும் (Internet and Social Medias)

மாணவர்களின் கல்வி வாழ்க்கைக்கு உலை வைக்கின்ற காரணியாக நவீன ஊடகங்கள் காணப்படுகின்றன. புதிய வசதிகளைக் கொண்ட கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இன்டர்நெட் பாவனை போன்றன இதில் முக்கியம் பெறுகின்றன.

தற்கால உளவியல் அறிஞர்கள், நவீன ஊடகங்கள் தொடர்பான பல உளவியல் கோளாறுகளைக் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் இணையத்துக்கு அடிமையாதல் (Internet Addiction Disorder-IAD) மற்றும் பேஸ்புக் வலைத்தளத்திற்கு அடிமையாதல் (Facebook Addiction Disorder - FAD) என்பன பாரதூரமானவை.

### 1. Internet Addiction Disorder- IAD

இணையத்தின் பயனை நாம் அனைவரும் அனுபவிக்கின்றோம். எங்களில் பலருக்கு வேலைகளைச் சுலபமாக்க, கல்வி பயில, தொடர்பாடல்களை மேற்கொள்ள மிக அத்தியவசியமானதும் தவிர்க்க முடியாததுமான ஓர் ஊடகமாக இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் காணப்படுகின்றது என்ற கூற்று மிகைப்படுத்தப்பட்டதன்று. இருப்பினும், தொடர்ச்சியான இணையத்தின் பாவனை சிலரின் சீரான வாழ்க்கை, அமைதியான தொழில், நெருக்கமான உறவினர்கள், திடமான இலட்சியம் என்பவற்றுக்குத் தடையாக அமைகிறது.

கணினிக்கு அடிமையாதல் (Computer Addiction), ஒன்லைன் அடிமையாதல் (Online Addiction) அல்லது இணையத்துக்கு அடிமையாதல் கோளாறு (Internet Addiction Disorder- IAD) என்ற பெயர்களில் அறியப்படுகின்ற இணையத்திற்கு அடிமையாதல், பின்வரும் அம்சங்களையும் உள்ளடக்குகிறது.

### i. Cybersex Addiction

இணைய போர்ணோகிரபி (Internet pronography), வயது வந்தோருக்கான அரட்டை அறை (Adult Chat Room) போன்றவற்றை மிகையாகப் பயன்படுத்தல்.

### ii. Cyber-Relationship Addiction

சமூக வலைத்தளங்கள் (Social networking), அரட்டை அறைகள் (Chat rooms) போன்றவற்றுக்கு அடிமையாதல், குடும்பம் மற்றும் நண்பர்களாகிய நிஜ வாழ்க்கையின் உறவினர்களைவிட ஒன்லைன் நண்பர்கள் முக்கியம் பெறுதல்.

### iii. Cyber-Relationship Addiction

அபரிமிதமான ஒன்லைன் விளையாட்டு, சூதாட்டம், பங்கு வர்த்தகம் அல்லது eBay போன்ற ஒன்லைன் ஏலத்திற்கான பக்கங்களை அதிகம் பயன்படுத்தல்.

### iv. Information Overload

குடும்பம், நண்பர்கள் போன்ற எந்தவொரு பிரிவினருடனும் சமூக இடைத்தொடர்புகளின்றி வலைத்தளங்களில் அளவுக்கதிகமாக உலா வருதல், தரவுத்தளங்களில் (Database) எல்லை கடந்து தேடுதல்.

### v. Computer Addiction

அளவுக்கதிகமாக Computer Games விளையாடுதல் மற்றும் இது போன்ற செயற்பாடுகள். ஒரு நாளைக்கு 8 அல்லது 10 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் தொடர்ச்சியாக இரண்டு அல்லது மூன்று நாட்களில் குறிப்பிட்ட Computer Game ஒன்றை விளையாடி முடிக்கின்ற மாணவர்கள் உள்ளனர்.

### 2. Facebook இற்கு அடிமையாதல்

இவ் உளவியல் கோளாறு Facebook Addiction Disorder– FAD என்றழைக்கப்படுகின்றது. Facebook இற்கு அடிமையான, Facebook இல் தங்களுடைய கட்டுப்படுத்த முடியாத செயற்பாடுகள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கென அமெரிக்க உளவியலாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பதமே இதுவாகும். FAD இனால் பாதிக்கப்படுகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர்களின் எண்ணிக்கை தற்போது 350 மில்லியனைத் தாண்டிவிட்டதாகவும் இவ் உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பேஸ்புக் என்ற சமூக வலைத்தளத்தில் மூழ்கிய மாணவர்கள் தங்களுடைய பொன்னான நேரங்களைப் பாடங்கள் மீட்டுவதில் செலவு செய்வியாது, பயனற்ற முறையில் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காலப்போக்கில் அதற்கு அடிமையாகி தமது எதிர்காலத்தையே பாழடையச் செய்கின்றனர். படிப்படியாக சமூகத்திலிருந்து ஒதுங்கித் தனிமையாகி ஒன்லைன் நட்புக்கும் பாலியல் விவகாரங்களுக்கும் அடிமையாகி விடுகின்றனர்.

பேஸ்புக் மூலம் ஏற்பட்ட தொடர்புகளின் காரணமாக கற்பை இழந்த யுவதிகளும் மாணவிகளும் அதிகம் பேர் எமது நாட்டிலும் உள்ளமை மிக வேதனைக்குரிய அம்சமாகும். இவை தவிர, நவீன ரக கையடக்கத் தெலைபேசிகளும் மாணவர்களின் இலட்சிய வாழ்க்கைக்குத் தடையாக அமைகின்றன. இன்டர்நெற் வசதியுடன் கூடிய ஒரு கணினியில் நிறைவேற்றக் கூடிய அனைத்துக் காரியங்களையும் இவ்வகையான கைத் தொலைபேசியில் மேற்கொள்ள முடியும் என்பதால் இதனால் ஏற்படும் ஆபத்துகளும் பாரதூரமானவை.

கொழும்பு மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவத் தலைவர்களால் 9ஆம் தர மாணவிகளின் வகுப்பறையில் வைத்து 4 கையடக்கத் தெலைபேசிகள் கைப்பற்றப்பட்டமையால் அம்மாணவிகளுள் இருவர் தற்கொலை முயற்சி வரை சென்ற சம்பவம் நாம் அறிந்ததே. காதல், காமம் மற்றும் தீய செயல்களுக்கு இடைத்தரகராகவும் ஊக்குவிக்கும் காரணியாகவும் கையடக்கத் தெலைபேசி பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறாக நன்மைக்கும் ஆக்கத்திற்கும் பயன்பட வேண்டிய நவீன ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் தீமைக்கும் அழிவுக்கும் பயன்படுத்தப்படுவது வருந்தத்தக்கதும் கவலைக் குரியதுமாகும். எதிர்காலத் தலைவர்களான இன்றைய இளம் தலைமுறையை இவற்றிலிருந்து காப்பாற்ற வேண்டியது அனைவரதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிச் சுற்றோட்டத்தின் முன்னோடி

## இப்னு நபீஸ் (1210-1288)

**இஸ்லாமிய** வரலாற்றின் அறிவியல் யுகத்தில் தோன்றிய பல அறிஞர்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்களின் வரிசையில் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான சரியான விளக்கத்தை வழங்கிய விஞ்ஞானி இப்னு நபீஸ் மருத்துவத் துறைக்கு ஆற்றிய பங்கு மகத்தானது. ஹி. 607 (1210)ல் சிரியாவிலுள்ள டமஸ்கஸ் நகரத்திலே பிறந்த இவர் அங்கேயே ஆரம்பக் கல்வியையும் இஸ்லாமிய சட்டம், தத்துவம், ஹதீஸ் இலக்கியம், அரபு இலக்கணம், இலக்கியம் ஆகிய கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

இப்ன் அத்தக்வார், இம்ரான் அல் இஸ்ராஈலி போன்றவர்களிடம் மருத்துவம் பயின்ற இவர் அதில் தேர்ச்சியும் பெற்றார். பின்னர் டமஸ்கஸில் உள்ள நூரி வைத்தியசாலையில் மருத்துவப் பணி புரிந்தார். இவர் ஹி. 633 (1236)ல் எகிப்துக்குச் சென்று கெய்ரோ நக்ரில் ஸுல்தான் ஸலாஹுத்தீனால் நிர்மாணிக்கப்பட்ட நாஸிர் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றினார். பின்னர், கெய்ரோவில் உள்ள அல்மன்ஸூரி மருத்துவமனையில் தலைமை மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார். இவ்வாறு இவர் மருத்துவத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது.

### இவரது நூல்கள்

- கிதாப் பிர்ரமத்
- அல்முஹத்திப் பில்குஹ்ல்

இவை இரண்டும் கண்ணோய்கள் சம்பந்தமாக இவர் எழுதிய நூல்கள்.

- கிதாபுல் முக்தார் பில்அங்திய்யா (இது உணவியல், போசணை சம்பந்தமான நூல்)
- கிதாபுஷ் ஷாமில் பிஸ்ஸினா அத் திப்பிய்யா (இதுவே இவர் எழுதிய மருத்துவ நூல்களுள் மிகப் பெரிய நூல் ஆகும். இது 80 பாகங்களைக் கொண்டது. இது மருத்துவம் சம்பந்தமான மூலாதாரங்கள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.)

### இவரது விரிவுரை நூல்கள்

இவர் நூல்களை எழுதியது மாத்திரமன்றி பிற மருத்துவத்துறை விற்பன்னர்களால் எழுதப்பட்ட நூல்களுக்கு விளக்கமும் விரிவுரையும் எழுதினார். இந்த வகையில் ஹிப்போகிரடிஸ், ஹுனைன் பின் இஸ்ஹாக், இப்னு ஸீனா ஆகியோரின் மருத்துவ நூல்களுக்கு எழுதிய விளக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

- ஷர்ஹ் புஸூல் அபுக்ராத்
- ஷர்ஹ் லிமபாதிஉ அபுக்ராத்
- ஷர்ஹ் லிகிதாப் மஸாஇல் பித்திப்
- ஷர்ஹ் தக்திமதுல் மஃரிபதுல் அபுக்ராத்

அபூ அலீ பின் ஸீனாவின் நூல்களுக்கு எழுதிய விரிவுரை நூல்கள்:

- அஷ்ஷுரூஹுல் மௌஹூஆத் லிகானூன் இப்ன் ஸீனா பித்திப்
- ஷர்ஹுல் கானூன்
- கிதாப் முஃஜிஸுல் கானூன்

இந்த நூலைப் பற்றி அப்போதைய கலீபா தமது 'கஷ்புள் ளுனூன்' எனும் நூலகராதியில் குறிப்பிடுகையில், "உருவத்தில் சுருக்கமானது; உள்ளடக்கத்தில் முழுமையானது; அறிவியலுக்கு ஒரு பாதை" என்று கூறியிருந்தார்.

- 'ஷர்ஹ் தஷ்ரீஹுல் கானூன்

இந்த நூலிலேயே குருதிச் சுற்றோட்டம் தொடர்பான விளக்கத்தை முதன் முதலில் வெளியிட்டார். அதுவரை காலமும் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான தவறான கருத்துக்களே நில்வி வந்தன.

கல்லன் குறிப்பிடுவது போல இருதயத்தின் இரு பக்கங்களுக்கும் இடையே உள்ள சுவரில் துவாரங்கள் இல்லை என்றும் குருதி நுரையீரல்கள் வழியாக இருதயத்தின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்தை அடைகிறது என்றும் இவர் நிறுவினார். சிறிய குருதிச் சுற்றோட்டம் என்று அழைக்கப்படும் நுரையீரல் குருதிச் சுற்றோட்டம் பற்றி உலகிலே முதன் முதலாக முன்வைக்கப்பட்ட சரியான கருத்து இதுவே ஆகும்.

இவர் எகிப்திலே வாழ்ந்த காலத்தில் மருத்துவ நூல்களை மட்டுமன்றி அளவையியல், இஸ்லாமியச் சட்டம், தத்துவம் முதலிய துறைகளிலும் ஏராளமான நூல்களை எழுதினார். இவ்வாறு மருத்துவத் துறைக்கு மகத்தான பங்களிப்பாற்றிய இவர் ஹி. 687 (1288)இல் மரணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹர்ரம்
1433

புதுவருட வாழ்த்துக்கள்...

புதுவருட வாழ்த்துக்கள்...
புதுவருட வாழ்த்துக்கள்...
புதுவருட வாழ்த்துக்கள்...

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.


செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமையும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எண்ணியதே கிடைக்கும். யார் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் ஹிஜ்ரத் மேற்கொண்டாரோ அந்த ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் மேற் கொண்டதாக அமையும். உலகத்திற்காக அல்லது ஒரு பெண்ணை திருமணம் முடிப்பதற்காக ஹிஜ்ரத் மேற்கொண்டால் எதற்காக அவன் ஹிஜ்ரத் மேற்கொண்டானோ அதுவே அவனுக்கு கிடைக்கும். (அல்புகாரி, முஸ்லிம்)

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012ஆம் ஆண்டுக்கான அரபு எழுத்தணிக் கலண்டர்கள் வெளிவந்து விட்டன.

உங்களது வியாபார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களை பெயர், முகவரியுடன் அழகிய முறையில் அச்சாக்கம் செய்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.














சகோதரர்

## அஷ்மல்கான்

077 6984202
071 8112682

தலைமையகம்
இல. 77, தெமடகொட வீதி, கொழும்பு 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org